பொது நூலகம்
யாழ்ப்பாணம்

பக்கங்கள் எட்டு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

அசல் 22 கரட் தங்க
நகைகளுக்கு யாழ் நகரில்
சிறந்த ஸ்தாபனம்

**அர்ச்சனா**
**ஜுவலர்ஸ்**

118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்:
[கி-2127]

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 26 செவ்வாய்க்கிழமை (11-09-2001) தொலைபேசி: 3378 ஒலி: 274

## யாழ். போதனா வைத்தியசாலை வளவில்

# கட்டடம்கட்ட வெட்டிய கிடங்கில்

# மனித மண்டைஓடு - எலும்புக் கூடு!

## யாழ். மண்ணில் மற்றொரு மனிதப் புதைகுழியா ?

(அலுவலக நிருபர் எஸ். கோபி)

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் நவீன முறையில் அமைக்கப்படவுள்ள பிரேத அறைக் கட்டடத்திற்கான அத்திவாரம் வெட்டும் போது இரண்டு மனித மண்டையோடும்அவற்றிற்துரிய கை கால் பகுதியும் நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக யாழ். போர்தனா வைத்திய சாலைப் பணிப்பாளர் டாக்டர் (செல்வி) நவமலர் கனகரட்ணம் யாழ். பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இதனை அடுத்து பிரேத அறை அமைக்கும் பணி இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

யாழ் போதனா வைத்திய சாலையில் சடலங்களைப் பாதுகாப்பாக வைப்பதற்கு போதிய இடவசதிகள் இன்மையால் வடக்கு புனர் வாழ்வு புனரமைப்பு அதிகாரசபை யாழ்ப்பாணம் பண்ணைப் பகுதியில் நவீன வசதிகொண்ட பிரேதஅறையை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த போது அப் பகுதியில் உள்ள அமைப்புக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தன.

இதனை அடுத்து யாழ்போதனா வைத்திய சாலையின் பின் புறத்தில் இப் பிரேத அறையை அமைப்பதற்கு முடிவு செய்து நேற்று முற்பகல் 11 மணியளவில் அத்திவாரம் வெட்டிய போதே இந்த எலும்புக் கூடுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இதனையடுத்து அத்திவாரம் வெட்டும் பணிகள் இடைநிறுத்தப் பட்டு இவ் விடயம் குறித்து உடனடியாக யாழ் பொலிசார் மற்றும் யாழ்

[8ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய மீனவர்கள் 13பேரும் நேற்று விடுதலை

[யாழ்ப்பாணம்]

யாழ் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 13 இந்திய மீனவர்களும் நேற்று யாழ் நீதிமன்ற நீதிவான் இ.த.விக்கினராஜா வின் பணிப்பின் பேரில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை இந்தியாவுக்கு அனுப்பிவைப்பதற்காக யாழ் பொலிசார்காங்கேசன்துறைக் கடற்படைத் தளபதி பிரிகேடியர் சுரவீரவிடம் மீனவர்களை ஒப்படைத்துள்ளனர்.

மீனவர்களை இலங்கைக் கடற்படை எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்க நடவ

[8ஆம் பக்கம் பார்க்க]

## ஜே. வி. பியின் காலக்கெடு நாளை முடிவு

# அமைச்சர்களைக் குறைப்பதில் ஜனாதிபதி சந்திரிகா பெரும்பாடு!

(கொழும்பு)

மக்கள் விடுதலைமுன்னணி

கையின் பிரகாரம் அமைச்சர்களின் எண்ணிக்கையை 20

தாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு 55இடங்கள்

(சென்னை)

இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு தமிழகத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளிலும், பொலிரெக்னிக் கல்லூரிகளிலும் 55 இடங்களை ஒதுக்கியிருப்பதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

தமிழக அரசின்உயர்கல்வித் துறை பிறப்பித்துள்ள ஆணையில், இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கும், தமிழகத்தில் அகதிகளாகவுள்ள மாணவர்

## துப்பாக்கிச்சூடு இருவர் பலி

[கொழும்பு]

கொழும்பு மாளிகாவத்தைபகுதியிலுள்ள வீடொன்றின்மீது நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இருவர்உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுமாலை 3.30 மணியளவில் இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தின் போது இறந்தவர்களில் ஒருவர் டாக்டர் என்றும் தெரிய வந்துள்ளது.

(ந-5)

(கொழும்பு)

மக்கள் விடுதலைமுன்னணியுடன் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு செய்து கொண்டபுரிந்துணர்வுடன்படிக்கையின் பிரகாரம் அமைச்சர்களின் எண்ணிக்கையை 20 ஆகக் குறைப்பதில் அரசுநெருக்கடிநிலையும் பெரும் சிக்கல்களையும் எதிர் நோக்கியுள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சரவையைக் குறைப்பதற்கான காலக்கெடு நாளை புதன்கிழமையுடன் முடிவடையவிருக்கும் நிலையில் ஜனாதிபதி பல சிரேஷ்ட அமைச்சர்களுடன் பலசுற்றுப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டும் எந்தவொரு முடிவும் மேற்கொள்ளப்பட முடியாத நிலையில் அரசு திணறுவதாக அமைச்சர் பௌஸி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிசந்திரிக்காவுடன் கருத்து முரண்பாடுகொண்ட

[8ஆம் பக்கம் பார்க்க]

# ஐ.தே.கட்சியை அறியவே நம்பிக்கையில்லாதீர்மானம்

## விநாயகமூர்த்தி எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ்மக்கள் பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக்காலத்தில் பட்ட, பட்டுக் கொண்டிருக்கின்ற அவல நிலையை வெளியுலகத்திற்கு எடுத்துக் காட்டுவதற்காகவே அரசு மீது நம்பிக்கையில்லாப் பிரேரணையை கொண்டுவர முன்வந்தேன் என்று அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ் மாவட்ட எம்.பியுமான அ. விநாயகமூர்த்தி தெரிவித்துள்ளார்.

தான் கொண்டுவர உத்தேசித்துள்ள நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெறும்என்ற நம்பிக்கையுடன் கொண்டுவரவில்லைஎன்றும், ஐக்கிய தேசியக் கட்சிக்கு நாம் ஆதரவு வழங்குவது போல் எமது பிரேரணைக்கு ஐக்கிய தேசியக்கட்சி ஆதரவு வழங்குகிறா என்பதைஅறிவதற்காகவே இதனைக் கொண்டுவரவுள்ளேன் என்றும் அ. விநாயகமூர்த்தி எம்.பி. தெரிவித்தார். (ம)

## யாழ். வைத்தியசாலையில் தங்கி

# சங்கர் சிகிச்சை பெற பொலிசார் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழகமாணவன் திவ்வியன் மற்றும்சங்கர் ஆகியோரின் விடுதலை தொடர்பாக கொழும்பு உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதை அடுத்து திவ்வியனினதும், சங்கரினதும் மருத்துவ அறிக்கையினை உடன் அனுப்பிவைக்குமாறு கொழும்பு உயர் நீதிமன்றம் யாழ் நீதிமன்றுக்கு உத்தரவிட்டுள்ளது.

இதனை அடுத்து மேற்படி நபர்கள் இருவரும் பொலிஸ் பாதுகாப்புடன் யாழ் சிறையிலிருந்து நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டுவரப்பட்டனர்.

இவர்களில் சங்கருக்கு மட்டுமே மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

[8 ஆம் பக்கம் பார்க்க]

யில், இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கும், தமிழகத்தில் அகதிகளாகவுள்ள மாணவர்களுக்கும் பொறியியல்கல்லூரிகளில் 25 இடங்களும், பொலிரெக்னிக் கல்லூரிகளில் 30 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# உருவிலில்

## 5 இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

உடுவில் பகுதியில் நேற்று முன்தினம் ஐந்துஇளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் அறிவித்துள்ளது. (ந- 5)

## புலி உறுப்பினர் விபத்தில் மரணம்

(வவுனியா)

முல்லைத்தீவுக் கடற்பரப்பில் ஏற்பட்ட விபத்தொன்றில்

★ மேஜர் யாழ்வேந்தன் - [அழகரத்தினம் அரவிந்தன் யாழ்ப்பாணம்]

என்ற போராளி வீரச்சாவைத் தழுவிக்கொண்டதாக நேற்றிரவு புலிகளின் குரல் வானொலி அறிவித்துள்ளது.

[ம]

வர் டாக்டர் என்றும் தெரிய வந்துள்ளது. (ந-5)

# மீசாலையில் காலிழப்பு

(யாழ்ப்பாணம்)

மீசாலை சோலையம்மன் கோயிலடியில் மிதி வெடியில் சிக்குண்ட ஒருவர் தனது இடதுகாலை இழந்துள்ளார்

நேற்று இடம் பெற்ற இச் சம்பவத்தில் துன்னாலை தெற்கைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான அரசன் ராஜேஸ்வரன்[வயது-30] என்பவரே காலையிழந்தவராவர்

ஏற்கனவே இப் பகுதியில் மூவர் மிதிவெடியில் சிக்குண்டு காலையிழந்தமையும் இங்கு குறிப்பிடத் தக்கது (ந-4-23-52)

# சந்நிதியில் கறி அண்டாவில் வீழ்ந்தவர் மரணம்

[புலோலி]

செல்வச்சந்நிதி முருகன் ஆலயத் தேர் உற்சவமன்று அன்னதானமடத்தில்சமையல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை மயக்கமடைந்து கறி அண்டாவுக்குள் விழுந்து எரி காயங்களுடன் வைத்தியசாலையில்அனு

[8ஆம் பக்கம் பார்க்க]

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கை அரசு புலிகளுடன் சமாதானப்பேச்சை முன்னெடுக்க இந்தியா வற்புறுத்தும்

## புதுடில்லி மாநாடு இதனையே கோடி காட்டுகிறது

(கொழும்பு)

இலங்கை விவகாரத்தில் இந்தியா வெறும் பார்வையாளராக இருக்காது, விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடுமாறு கொழும்பை அது வற்புறுத்தும்.

கடந்தவாரம் புதுடில்லியில் நடைபெற்றஇந்திய-இலங்கை மகாநட்டின் பொதுக்கருத்து இதனையே சுட்டிக்காட்டுகின்றது என்று ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியா, இலங்கையைச் சேர்ந்த பேராளர்கள் மத்தியில் ஏற்பட்ட பொதுக்கருத்தின்படி, கொழும்புநிர்வாகம் இந்திய அரசின் ஒத்துழைப்புடன் விடுதலைப்புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

அத்துடன், சிறீலங்கா இராணுவ உதவி எதையும் கேட்குமாயின் அது தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளைத் தீர்ப்பதற்கு உடன்பட்ட பின்னரேயாக இருத்தல்வேண்டும். இந்தியா தனது இலங்கை தொடர்பான பங்குப்பணிகளை அதிகரிக்க வேண்டுமென்னும் பொதுக்கருத்து ஏற்பட்டிருக்கிறது.

மாநாட்டில் பேசிய ஈ.பி.டி.பி. சார்பு டாக்டர் கே. விக்னேஸ்வரன் ஜனநாயக வழிக்குவந்த ஈ.பி.டி.பி. போன்ற கட்சிகளுடன் பேசி ஒரு முடிவிற்கு வர வேண்டுமெனத் தெரிவித்தார். புலிகளுடன் பேசாமல் எடுக்கப்படும் தீர்மானம் பயன்தராதுஎன்று கூட்டணி மற்றும் புளொட். ஈ.பி.ஆர்.எல்.எவ் பிரதிநிதிகளும் தெரிவித்துள்ளனர். (உ)

## உழவு இயந்திரம் கொள்வனவு

(மந்திகை)

பருத்தித்துறை நகரசபையில் கழிவகற்றுவதற்காக இரண்டு சில்லுஉழவு இயந்திரம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

சபை நிதியிலிருந்து 3 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் மேற்படி உழவு இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-23)

## இலஞ்சம் பெற்ற இன்ஸ்பெக்டர் இருவர் கைது

(கொழும்பு)

பதுளை மாவட்டப் பொலிஸ் நிலையம் ஒன்றில் இரண்டு உதவிப் பொலிஸ் இன்ஸ்பெக்டர்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் சுமார் 8 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுள்ளனர்.

சட்டவிரோதமான முறையில் கஞ்சா வைத்திருந்ததாக குற்றஞ் சாட்டப்பட்டிருந்த ஊர்காவல் படை வீரர் ஒருவரைத் தப்புவிப்பதற்காகவே இவர்கள் இவ்வாறு இலஞ்சம் பெற்றுள்ளனர். (செ)

## தொடர்ந்தும் விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த வன்னிப்பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் நீதிமன்றத்தினால் விடுதலைசெய்யப்பட்டும் தமதுசொந்த இடத்திற்கு திரும்பமுடியாது தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்தவருடம் தென்மராட்சி பகுதியில் கைதுசெய்யப்பட்டவர்களான தோமஸ் ராஜ்குமார் (புதுக்குடியிருப்பு) ராமசாமி ரேணுகா (அக்கராயன் கிளிநொச்சி) ஆகிய இருவருமேபாதுகாப்புஅமைச்சின் அனுமதியின்றி தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-5)

## புதிய இளைஞர் கழகம் உதயம்

(ஈச்சமோட்டை)

யாழ்ப்பாணம் பாண்டியன் தாழ்வில் தோமஸ் இளைஞர் கழகம் என்ற பெயரில் புதிய இளைஞர் கழகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி கழகம் சமூக சேவை, கலாசார முன்னெடுப்புக்களுக்கு முன்னுரிமையளிப்பதென தீர்மானித்துள்ளது. (உ-59)

## கிருமிநாசினிக் கான்களில் அடைக்கப்பட்ட உணவு வன்னிக்குஅனுப்பப்படுகிறது

### வவுனியா அரச அதிபர் குற்றச்சாட்டு

[வவுனியா]

கிருமிநாசினிகள் இரசாயன பொருட்கள் அடைக்கப்பட்ட வெற்றுக் கான்கள், பரல்கள் போன்றவற்றில்வேறுஉணவுப் பதார்த்தங்கள் அடைக்கப்படுவதாக வவுனியாமாவட்ட அரசாங்க அதிகாரி கே. கணேஸ் குற்றம் சாட்டியுள்ளார்.

வவுனியா நகர மண்டபத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மனித பாவனைக்குதவாதநச்சுப்பொருட்கள் இருக்கும்கான்கள்மற்றும்பரல்களில் உணவுகள் அடைக்கப்பட்டு வவுனியாவிலிருந்து வன்னிப் பிரதேசங்களுக்கு அனுப்பப்படுவதாகவும் இது குறித்த தகவல்களை மக்கள் தமக்கு தெரியப்படுத்த வேண்டுமென அவர் வேண்டுகோள விடுத்துள்ளார். (செ-4)

## தப்பியோடிய படை வீரர் எலும்புக் கூடாக மீட்பு

(கொழும்பு)

அதிரடிப்படையில இருந்து தப்பியோடிய இராணுவ வீரர் இரண்டு மாதங்களின் பின் எலும்புக் கூடாக கண்டு பிடிக்கப்பட்ட சம்பவம் எலலைக் கிராமமான புளுக்குணால காட்டுப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

தப்பியோடும் போது அவர் எடுத்துச் சென்ற துப்பாக்கியைக் கொண்டே மேற்படி நபர் இனம் காணப்பட்டுள்ளார்.

இவரது மரணம் தற்கொலையா, கொலையா என்பது குறித்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற் கொண்டுள்ளனர். [உ]

## இடைநிறுத்தப்பட்ட சமூக நலத்திட்டங்கள் மீண்டும் நடைமுறைக்கு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த சமூகநலத்திட்டங்களை மீண்டும் நடைமுறைப் படுத்துவதெனவும் மாவட்ட மட்டத்தில் அரசஅதிபர்தலைமையிலும்பிரதேசமட்டத்தில் பிரதேச செயலாளர் தலைமையிலும் இரண்டு குழுக்களை நியமிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நொராட் நிதியுதவி மூலம் டேபாதிட்டத்தின் கீழ்எட்டு பிரதேச செயலாளர் பிரிவுகளில்இடை நிறுத்தப்பட்டதிட்டகளே மீண்டும்நடைமுறைப் படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## யாழ். மத்தியில் இலவச கணனிப் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முறைசாராக் கல்விப்பிரிவால் இலவச கணனிப் பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இவ் இலவசப் பயிற்சி நெறிக்கு 99, 2000, 2001 ஆண்டுகளில் கா.பொ.த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றியமாணவர்கள் விண்ணப்பிக்க முடியுமெனவும், விண்ணப்பப் படிவங்களை கல்லூரி அலுவலகத்தில் பெற்று எதிர்வரும் 14ந் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறும் கல்லூரி அதிபர் க. இராசதுரை கேட்டுள்ளார். (ந)

## சஞ்சிகை வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ் உயர்தர தொழில் நுட்ப நிறுவன ஆங்கிலதேசிய டிப்புளோமா மாணவர்களின் ஆங்கில சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை புதன்கிழமை 2.00மணிக்கு நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு நிறுவனப் பணிப்பாளர் ரீ இராஜரட்ணம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

சஞ்சிகையின் ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறைத் தலைவர் திருமதி சாந்தினி விக்கினராஜா நிகழ்த்துவார். (இ)

### தங்க நகைகள் திருட்டு

(ஏழாலை)

இரவுநேரம் வீட்டார் உறக்கத்தில் இருந்தசமயம் உள்நுழைந்த திருடர் இளம் குடும்பப் பெண் ஒருவரின் கழுத்திலிருந்த பெறுமதிமிக்க தங்க நகைகளை திருடிச் சென்றுள்ளனர்.

மல்லாகம் பகுதியில் உள்ள வீடொன்றிலேயே இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. (செ-12)

### அதிபர்களுக்கான கூட்டம்

[வேலணை]

தீவக கல்வி வலய பாடசாலைகளில் தரம் 6 பயிலும் மாணவர்களுக்கான 'யூனிசெவ்' நிறுவனத்தின் ஏற்பாட்டில் செயற்படுத்தப்படும், தமிழ் மொழிப் பின்னடைவை மேம்படுத்தும் திட்டம் தொடர்பான விளக்கக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9மணிக்கு தீவக கல்வி வலயத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு தீவக கல்விவலயத்தைச் சேர்ந்த 20 பாடசாலை அதிபர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். [வ-5]


### தலைமைக் காரியாலயம் இடமாற்றம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் இல: 833ல் இயங்கி வந்த திக்கம் வடிசாலைக்குரிய தலைமைக் காரியாலயம் 10 09.2001 ந்திகதி முதல் நெல்லியடி யாழ்ப்பாண வீதியில் அமைந்துள்ள நாவலர் மடத்தடியில் இயங்கி வருகின்றது என்பதனை அறியத்தருகின்றேன்.

பொது முகாமையாளர்
திக்கம் வடிசாலை,
அல்வாய்.

(கி- 2478)



### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### பல்கலைக்கழக அனுமதி 2001 | 2002

கற்கைநெறி : கலை

விசேட அனுமதி - நடனம் / சங்கீதம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2001/2002 கல்வியாண்டுக்கு விசேட அனுமதியின் கீழ், உயர்தரப் பரீட்சையில் நடனம்/சங்கீதம் ஆகிய பாடங்களில் சித்திபெற்ற மாணவர்களுள் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் பெயர்ப் பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு, கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப் பலகையில் இடப்பட்டுள்ளது. அனுமதி பெற்ற மாணவர்கள் தங்கள் பதிவுகளை 21-09-2001ஆம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்.

(C/2476)



### பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமைக் காரியாலய கட்டடத்திற்கான

### அடிக்கல் நாட்டும் விழா அழைப்பிதழ்

நாளை 12 09. 2001 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.00 மணி தொடக்கம் 10.00 மணி வரை உள்ள சுப முகூர்த்த வேளையில் பரு. பல நோ.கூட்டுறவுச் சங்கக்காணியில் பணிமனை கட்டுவதற்கு திருவருள்பாலிக்கப்பட்டுள்ளதால்;

இவ் அடிக்கல்லை
பருத்தித்துறை பிரதேசச் சபைத் தலைவர்
**உயர்திரு. ஐ ஸ்ரீரங்கேஸ்வரன் அவர்கள்**
நாட்டுவார்.

இவ் வைபவத்திற்கு பணிப்பாளர்கள், பணியாளர்கள், நலன் விரும்பிகளை அன்புடன் அழைக்கின்றோம்.

(கி-2477) - பொதுமுகாமையாளர்

## இராசி பலன்

**11-09-2001**
(ஆவணி 26, செவ்வாய்)
அட்டமி காலை 7.40 வரை
மிருகசீரிடம் மு.இ 7.06வரை
ராகுகாலம் 3.03-4.33
நல்லநேரம் 10.33-12.03
சித்தம்

**மேடம்**
இனிய நிகழ்வு, காரியஅனுகூலம், வாக்குப்பலிதம், அந்நியர்சந்திப்பு.

**இடபம்**
மாதர் நட்பு, தனவிரயம், வாக்குக்கலகம், முயற்சிதாமதம்.

**மிதுனம்**
ஜனவசியம், முயற்சிகைகூடும், புத்துணர்ச்சி, போசனசுகம்.

**கடகம்**
காரிய அலைச்சல், வீண் மனஸ்தாபம், பொருள்விரயம், தந்தைவழி உறவு.

**சிங்கம்**
நினைத்தகாரியம்கைகூடும், தனலாபம், மனமகிழ்ச்சி, குடும்பசுகம்.

**கன்னி**
தொழில்வெற்றி, சுபநிகழ்ச்சி, கீழ்ப்படிவு, உற்சாகம்.

**துலாம்**
சம்பத்து, புதியதிட்டம், பிரயாணம், அதிகபிரயாசை.

**விருச்சிகம்**
எதிர்பாராத மனஸ்தாபம், முயற்சிதடங்கல், உடல் சோர்வு, திடீர் நன்மை.

**தனுசு**
காரியநன்மை, தனலாபம், நண்பர்கள் சந்திப்பு, கௌரவம்.

**மகரம்**
தொழில்விருத்தி, திடீர் பயணம், உடல்நலம், முயற்சி கைகூடும்.

**கும்பம்**
புத்திரரால் கவலை, காரியதாமதம், மனச்சஞ்சலம், திடீர் நன்மை.

**மீனம்**
வெகுளித்தனம், தன்னம்பிக்கைக்குறைவு, கீர்த்தி, அரச நன்மை.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

**வளவன்**

# ஒடுக்கப்பட்டோரின்சுதந்திரத்திற்காக
# பாடிய புலவன் மகாகவி பாரதி

இந்தியாவின் 'தேசியக் கவி' என்று காந்திஜியால் போற்றப்பட்டுச் சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம், என முழக்கமிட்ட கவிஞன் பாரதியின் நினைவு நாள் இன்று.

'நீடுதுயில் நீக்கப்பாடி வந்த நிலா'
பாரதியின் நினைவு தினம் இன்று

காந்திஜியைஒருமுறை பாரதியார் சந்தித்தார். அப்போது ஷெல்லி என்ற கவிஞனுக்கு மன்றம் அமைத்து அவரது கவிதைகளிலே பாரதி மூழ்கியிருந்த காலம். காந்திஜியை சந்தித்த பாரதி திருவல்லிக் கேணியிலே நடக்கும் இலக்கிய மன்றுக்கு வருமாறு அழைத்தார். காந்திஜி தனது காரியதரிசியைப் பார்த்துபாரதியின் கோரிக்கையை நிறைவேற்ற நேரம் கிடைக்குமா? எனக் கேட்டார். நாளை சரிப்பட்டு வராது எனக் காரியதரிசி தெரிவிக்க உங்களுக்காக எனது திகதியைஒத்திப்போட முடியாது என்று கூறிய புலவன் சுப்பிரமணிய பாரதி!

மகாகவி பாரதியின் குரு யாழ்ப்பாணச் சாமி என்று அழைக்கப்படும் மாமனிதன். மகாகவி பாரதியைப் பற்றிப் பேசுவதற்கு இந்தமண்ணிற்கு அதிக அருகதையுண்டு.

எங்கெல்லாம் சுதந்திரம் இல்லையோ அங்கெல்லாம் நான் இருப்பேன் என்று பாடினான் பைரன் என்ற புலவன். வலது குறைந்த அந்தப் புலவன் போராளியாகக் கிரேக்க சுதந்திரத்திற்கு போராடியதை உலகம் மறந்துபோக முடியாது. பைரன், ஷெல்லி போன்ற கவிஞர்களின் அடிச்சுவட்டிலேவந்தவரே பாரதி! அவரைமிக அபாயமானபயங்கரவாதி(DangerousTerrorist) எனப் பிரிட்டிஷ் ஆட்சி கடலூர்ச் சிறையிலே தள்ளியது. அவர் பயந்து விடவில்லை. 'ஜயமுண்டு, பயமில்லை மனமே - இந்த ஜன்மத்திலே விடுதலையுண்டு' என்று பாடினார்.

சலூர் என்பவன் இத்தாலியின் சுதந்திரத்திற்காகப் போராடிய ஓர்இராஜதந்திரி. அவனைப் பற்றி டெயிலர் என்ற ஆசிரியர் ஓ... அவரா இத்தாலியில் போராட்டம் நடந்தபோது அவர் பிரெஞ்சுக் கவிதைகளில் மூழ்கியிருந்தார் எனக் குற்றம் சாட்டுகின்றார்.

**சி. தர்மகுலசிங்கம்**

ஆனால் பிரெஞ்சு, ஆங்கிலக் கவிதைகளிலே திளைத்திருந்த மகாகவி பாரதி இந்தியாவுக்கு மாத்திரமன்றி உலகத்திலெங்கெங்கு ஒடுக்கப்பட்டவர்கள் இருந்தார்களோ அவர்களுக்காக எல்லாம் பாடினார். பாடியதை மற்றவர்கள் பாடச் செய்தார்.

சின்னஞ்சிறிய பெல்ஜிய நாட்டுக்குள் ஜேர்மன் படைகள் நுழைந்தன. அப்போது கூடவே விடுதலைக் கவிஞன் பாரதியின் பார்வையும் அங்கே விழுந்தது. சின்னஞ்சிறு பெல்ஜியமே தர்மத்தின் வெற்றியினைச் சூது கவ்வும். தருமம் மறுபடி வெல்லும் என்று நினைத்துஅந்த நாட்டுக்கு கவிதையிலே வாழ்த்துக் கூறினார்.

ரஷ்யாவிலே ஜாரின் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. 'இம் என்றால் சிறை வாசகம் ஏன் என்றால் வனவாசம்' ரஷ்ய மக்கள் அடிமைகளாய் வாழ்ந்த அந்தக் காலத்தில் லெனினின் புரட்சி வெடித்தது. அந்தப் புரட்சியை கீழ்த்திசையிலே வடித்துக் காட்டியவன் பாரதியே.

'மகாகாளி பராசக்தி ருஷ்ய நாட்டில் கடைக்கண் வைத்தாள் ஆங்கே ஆஹா என்றெழுந்தது பார் யுகப் புரட்சி கொடுங்கோலன் அலறிவிழுந்தான்'

பாரதியின் பார்வை சர்வதேசியம்மிக்கது இந்தியாவின் தலைவர்களில் லெனினுக்குப் பிடித்தவர் திலகர். அது போன்றே பாரதிக்குப் பிடித்தவரும் திலகரே.

நிலங்களை ஐந்தாகவகுத்து நிலநூலில் தனக்கிருந்தவல்லமையை எடுத்துக் காட்டியவன் தமிழன். பாரதியாரோ தொழிலாளர்களை நாலுபிரிவாகப் பிரித்தார். முதலாவது பிரிவிலே மூளைஉழைப்பாளர்கட்கு இடம் கொடுத்தார். இரண்டாவதாக நிர்வாகஞ் செய்வோரைப் (Administrator பிரித் துரைத்தார். மூன்றாவது நிலையில் வர்த்தகர்களை வைத்தார். நாலாவதாக உழைப்பாளர்களை நிற்பாட்டினார். ஆனால் எத்தொழிலாளியும் எவருக்கும் அடிமையல்ல என்றும் எழுதிவைத்தார். மொத்தத்தில் அதிகாரப் பரவலாக்கலைச் சுட்டிக்காட்டிஉயர்ந்த சோசலிசத்தை விதைத்தவர் பாரதியே.

ஜவகர்லால் நேரு ஒரு பிராமணராக இருந்தும் நெற்றியிலேவிபூதிஅணிவதுஇல்லை. இந்த நாடுசமயச்சண்டைக்கு அப்பால் இருக்க வேண்டுமெனக் கனவு கண்டார் அவர். பாரதியும் இந்த அதியுயர்ந்த நிலைக்குச் சளைத்தவர் அல்லர். தாயின் மணிக்கொடி என்ற பாடலிலே இந்திரனின் வச்சிராயுதத்தையும் முஸ்லிம் மக்களின் இளம்பிறைச் சின்னத்தையும் உருவகப்படுத்திய ஒற்றுமைக் கவிஞன் அவர்.

நான் முதலிலேயே சீனன்; பின்பு நான் ஓர்உலகப்பிரஜை என முழங்கியவர் சன்யாட் சென். பாரதியும் நான் ஒரு தமிழன் என்று இனங்காட்டினார் 'செந்தமிழ்நாடெனும் போதினிலே இன்பத்தேன் வந்துபாயுது காதினிலே' எனப்பாடி இந்தியாவில் என் நாடு தமிழ் நாடே எனக் காட்டியபெருமை அவருக்கேயுண்டு. ஆனால் சமயம் வந்தபோது 'முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொதுவுடைமை, என இந்தியா நாட்டின் எதிர்காலத்தை இனங்காட்டினார். அதற்கப்பால் ''தனிஒருவனுக்கு உணவில்லை யெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்'' என முழங்கினார்.

''வீரசுதந்திரம் வேண்டி நின்றார் பின்பு வேறொன்று கொள்வாரோ'' எனப்பாடிய பாரதி, பாஞ்சாலி சபதம் மூலம் விடுதலையை உருவகப் படுத்தியுள்ளார். பாஞ்சாலி நிகழ்கால இந்தியா அந்தச் சபத்தின் இறுதி வெற்றி இந்திய விடுதலை. ''வந்தேமாதரம்என்போம். இந்த மாநிலத்தாயை வணங்குதல் செய்வோம் ''எனப்பாடிய பாரதியின் பாடல்கள் ஒவ்வொரு நாட்டின் தேசிய கீதத்திலும் அந்தந்தநாட்டின் கலாசாரத்துடன் இன்று சேர்ந்து ஒலிக்கின்றது. பூமியில் இருந்துவீசும்காற்றையும் குதிரையாக்கி ஏறித்திரியும் சக்தி மனிதனுக்கு வேண்டும் எனப்பாடிய பாரதியின் கருத்து எம்முள் புகட்டும் எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி! □

நன்றி
ஈழநாடு 1986

# அப்பாவி மக்கள் வசித்த 38 குடிசைகள் தீக்கிரை
## மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு சருவேப்பங்கேணி கிராமத்தில் இடம் பெயர்ந்தோர் வசித்து வந்த 38 குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன.

கடந்த சனியன்று பிற்பகல் பொல்லு, வாள்கள் சகிதம் அப்பகுதிக்குச் சென்ற இனந்தெரியாத சிலர் அங்கிருந்த உடைமைகளைச் சேதமாக்கியதுடன், குடிசைகளுக்கும் தீமூட்டியதாகத் தெரியவந்துள்ளது. (உ-4)

## கோம்பையன்மணல்
# மயானப்பகுதி பாதையால் இரவில்செல்ல மக்கள் பீதி

(யாழ்ப்பாணம்)
மானிப்பாய் யாழ்ப்பாணம் வீதி கோம்பையன் மணல் மயானப் பகுதியில் இரவு நேர வழிப்பறி அதிகரித்து வருவதாக அப் பகுதியூடாகப் பயணம் செய்யும் பொது மக்கள் அச்சம் தெரிவித்துள்ளனர்.

மக்கள் நடமாட்டம் குறைவாகக் காணப்படும் இப் பகுதியில் நடமாடும் கள்வர், இரவு வேளையில் செல்லும் பொது மக்களை மிரட்டிப்

# யாழ்ப்பாணத்தில் மூலிகைத்தோட்டம் ஒன்று உருவாக்கப்படுவது காலத்தின் தேவையாகும்

## யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(அரியாலை)

சித்த வைத்தியத் துறையை யாழ். மாவட்டத்தில் ஒரு ஒழுங்கு முறையின் கீழ் கொண்டுவரும் நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட வேண்டும். ஆயுர்வேத மருந்து வகைகளை இங்கேயே உற்பத்தி செய்வதற்கும் யாழ்ப்பாணத்தில் மூலிகைத் தோட்டமொன்றை அமைப்பதற்கும் ஒரு சக்திவாய்ந்தஅமைப்பொன்றை அங்குரார்ப்பணம் செய்யவேண்டிய கட்டாய தேவை இன்று இருக்கிறது.

செனித் மார்க்கட்டிங் அன்ட் அட்வடைசிங் சிஸ்டம்ஸ் அனுசரணையுடன் பிமல்தயாரிப்புக்களின் யாழ். மாவட்ட ஏக விநியோகத்தர்களான சிவா நறுமணப் பூங்கா ஆதரவில் ஆயுர்வேத மருந்துகள் மூலிகைகள் பற்றியகருத்தரங்கு ஒன்று நேற்று ஜெசித்தாராவிருந்தகத்தில் நடைபெற்ற போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய பிரதேதிய உள்ளூராட்சி ஆணையாளர் ரி.வி கிருஷ்ணசாமி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அகிலஇலங்கைஅரச சேவைகள் சித்த ஆயுர்வேத வைத்திய சங்கத்தலைவர் வைத்திய கலாநிதி இரா. கனகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் பல்வேறு ஆயுர்வேத மருந்துகளும் மூலிகைகளும் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை முதுநிலை விரிவுரையாளர் டாக்டர் சே.சிவசண்முகராஜா உரையாற்றுகையில்;

யாழ்ப்பாணமக்கள் நெடுங்காலமாக சித்த வைத்தியத்தைக் கைக்கொண்டு வருகிறார்கள். குடாநாட்டில் அசாதாரண சூழ்நிலை நிலவிய1990 களின் பிற்பகுதியில் அரசின் பொருளாதாரத் தடைகள் காரணமாக அனைத்துமருந்துப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவியது.

இதனை அடுத்து 1991இல் யாழ். மாநகரசபையில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் சித்த ஆயுர்வேத மருந்துகள் இங்கு தயாரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை விடப்பட்டது. ஆனால்அது பல காரணிகளால்பயனளிக்க வில்லை என்றார்.

வடகிழக்கு மாகாண முன்னாள் ஆயுர்வேத மாகாணப் பணிப்பாளர் டாக்டர் பூ.உரோ.மகேஸ்வரன் உரையாற்றும் போது;

இன்று சர்வகலாசாலைகளில் இருந்து வெளியேறுகின்ற சித்தவைத்தியர்கள் ஆங்கில மருந்துகளையும் சேர்த்து வழங்குகின்ற துர்ப்பாக்கிய நிலை காணப்படுகிறது இன்றைய கல்வித்திட்டத்தில் ஏற்பட்ட பாரிய மாற்றம் இளம் சந்ததி மூலிகைகள் பற்றிய அறிவைப் பெற உதவியிருக்கிறது. பல வைத்தியர்கள் தமது அறிவைப் பிறருக்கு வழங்க பின்னிற்கிறார்கள். சிலர் தம்மை வளர்த்துக் கொள்கிறார்கள். இந்த நிலை மாறிதர்மநெறியில் ஒழுகி சித்துக்கள் சேர்ந்த ஒருதுறையாக இது விளங்க அரசியல் பின்னணியும் ஆன்மீக நெறியும் இணைந்தபொறுப்புள்ள சங்கம் உருவாக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

வைத்திய கலாநிதிகள் பொ.இராமநாதன், வி.வேதநாதன், சோ, சபாநாதன் ஆகியோரும் உரையாற்றினர். யோ.எகட்டன் நன்றிதெரிவித்து உரையாற்றினார்.

(க-106)

---

பொது மக்களை மிரட்டிப் பணம், மற்றும் தங்க நகைகளை அபகரிப்பதுடன்,

வாகனங்களில்செல்வோரை களவுநோக்கத்துடன்துரத்திச் செல்வதால் இப் பகுதியை அண்டி விபத்துக்களும் அடிக்கடி இடம்பெறுவதாக தெரியவந்துள்ளது.

இதேவேளை, இந் நிலையைத் தவிர்க்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வர வேண்டும் என பொது மக்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

(உ)

---

## கட்டாக்காலி நாய்களால் தொல்லை

(அரியாலை)

அரியாலைப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. மக்கள் மீண்டும் மீளக்குடியமராத வீடுகள் தெருநாய்களின் இருப்பிடமாக மாறியுள்ளன. இரவில் ஊளைச்சத்தங்களாலும் பகலில் வீதிகளில் நாய்களின் அட்டகாசங்களாலும் மக்கள் பெரிதும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

(செ-106)

## அரசுக்கு ஆதரவளிக்கும் சிறுபான்மைக் கட்சிகள் சிந்தித்துசெயற்படவேண்டும்

(மட்டக்களப்பு)

இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மிகப்பெரிய பிரச்சினை இனப்பிரச்சினையாகும். இப்பிரச்சினையை தீர்க்காது அதிகார ஆசையில் ஜே. வி.பியுடன் அரசு கூட்டு சேர்ந்துள்ளது.

இத்தகைய அரசாங்கத்தின் நடவடிக்கை தமிழ்மக்களுக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்டமாகும்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்றஉறுப்பினர்பொன்.செல்வராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; சிறுபான்மை இனக்கட்சிகளை நம்பி அரசாங்கம் செயற்படக் கூடாதென்பதற்காகவே ஜே வி. பி. யுடன் அரசு கூட்டு சேர்ந்துள்ளது.

ஆனால் ஜே வி பி யோ புலிகளுடனான சமாதான பேச்சுவார்த்தையை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்துள்ளது.

எனவே, பொதுஜன ஐக்கிய முன்னணி அரசுக்கு ஆதரவளித்து வரும் சிறுபான்மை இனக்கட்சிகள் இன்றைய நிலைமைகுறித்து சிந்தித்து அவதானமாகச் செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

அரசாங்கம் தனது பொறுப்பை மறந்து பதவி சுக போகங்களைக் காப்பாற்றுவதற்காக இந்த நாட்டின் முக்கிய பிரச்சினையை வெளிப்படையாகவே தட்டிக்கழிக்க முன்வந்திருப்பது தமிழ்மக்களுக்கு பாதகவிளைவையே ஏற்படுத்தும். இதையிட்டு கவலையடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-4)

## பருத்தித்துறை அரசினர் மத்திய மருந்தக கட்டடம் அமைக்க தெரிவான காணி பொருத்தமற்றது

### அதிருப்தியுற்றோர் அமைச்சருக்கு மகஜர்

(புலோலி)

பருத்தித்துறை அரசினர் மத்திய மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் அமைப்பதற்கு தற்போது தெரிவு செய்யப்பட்டகாணி பொருத்தமற்றது. எனவே இக்காணியில் இம் மருந்தகச் சொந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதை நிறுத்தி பருத்தித்துறை நகரின் மையப்பகுதியில் பருத்தித்துறை நகர சபையால் வழங்கப்படவுள்ள காணியில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறைப் பிரதேசத்தைச் சேர்ந்த மிக முக்கிய பிரமுகர்கள், வர்த்தகர்கள் அடங்கிய 65 பேர் கொண்ட குழுவொன்று அவசர கோரிக்கைவிடுத்துள்ளது.

வடக்கு – கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், வடக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கு இது சம்பந்தமான அவசர மகஜர்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இம் மகஜரில் குறிப்பிடப் பட்டுள்ளதாவது;

தற்போது இம் மருந்தகக் கட்டட நிர்மாணத்திற்குத் தெரிவு செய்யப்பட்டகாணி ஆத்தியடிப் பிள்ளையார் ஆலயதர்மசாதனம்.

இந்த ஆலய தர்மசாதனத்தை நீதிமன்றத்தின் அனுமதியின்றி நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் நன்கொடை வழங்கமுடியாது. அவ்வாறு வழங்கப்பட்டால் அது சட்டவிரோதமாகும்.

இம்மருந்தகம்பருத்தித்துறை துறை முகத்திற்கு அருகாமையில் இரேவு மருந்தகம் என்ற பெயரில் கிட்டத்தட்ட 1884 ஆம் ஆண்டு தொடக்கம் இயங்கிவந்துள்ளது.

இரேவு என்பது துறைமுகம் எனப் பொருள். இராணுவ முகாம் அமைக்கப்பட்டதையடுத்து மருந்தகம் இடம் மாற்றப்பட்டது. இம் மருந்தகம் நகரின்மையப் பகுதியில் அமையாது விட்டால் பருத்தித்துறை துறைமுகப்பகுதி ஊழியர்கள், மீன்பிடிச் சமூக மக்கள் எந்த விதமான நன்மைகளையும் பெறமுடியாது. வைத்தியசாலை ஆரம்பிக்கப்பட்ட நோக்கமும் மாற்றமடையும்.

பருத்தித்துறை நகரசபை இம் மத்திய மருந்தகத்தை அமைப்பதற்கென பருத்தித்துறை திக்க முனைமைதானத்திற்கு அருகாமையிலும் அதற்கு அப்பாலும் காணிகளை வழங்க முன்வந்துள்ளது ஆகவே இம் மருந்தகத்தை சட்ட வலுவற்ற ஆலயக் காணியில் நிர்மாணிப்பதை உடன் நிறுத்தி பருத்தித்துறை நகரசபைக் காணியில் நிர்மாணிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அரசாங்க அதிபர் ஆலயக் காணியில் இம் மருந்தகத்தை நிர்மாணிக்க எடுக்கும் நடவடிக்கைகளை நிறுத்த உத்தரவிடவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

மகஜரின்பிரதிகள் வடக்கு – கிழக்கு மாகாண ஆளுநர், உள்ளூராட்சி ஆணையாளர், யாழ். அரச அதிபர், மாகாண பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் பருத்தித்துறைநகரசபைத்தலைவர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (உ-52)

## சரக்கு ரயிலுடன் கார் மோதியதில் இருவர் பலி

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மாத்தளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சரக்கு ரயிலுடன் கார் ஒன்று மோதியதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன் தினம் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. விபத்து நடந்த ''ஜெபசிக் குறு ரமன்'' ரயில் வேக் கடவையில் பாதுகாப்புக் கடவை இல்லாமையினாலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இக் கடவையில் பாதுகாப்புக்காக சேவையில் ஈடுபட்டிருந்த கடவை உத்தியோகத்தரை விசாரணைக்குட்படுத்துமாறு பொலிஸ் அதிகாரி உத்தரவிட்டதுடன் இது பற்றிய அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் விபத்து இடம் பெற்ற இடத்திற்கு அண்மையில் உள்ள ரயில்வே நிலையத்தினரிடம் உத்தரவிட்டுள்ளார். (செ-7)

## துப்பாக்கிச் சமரில் ஒருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

மாளிகாவத்தை ஜும்மா மத்திய வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சமரில் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாளிகாவத்தை வீதியில் முச்சக்கர வண்டியில் நின்றிருந்த ஒருவர் மீது இனந்தெரியாத ஆறுபேர் கொண்ட ஆயுதம் தாங்கிய குழு ஒன்று சரமாரியாகத் துப்பாக்கிபிரயோகம் மேற்கொண்டதில் முச்சக்கர வண்டியில் இருந்தவர் உயிரிழந்துள்ளார்.

துப்பாக்கி பிரயோகம் நடத்திய ஆறுபேரும் வான் ஒன்றில் தப்பிச்சென்றதாகவும் பொலிஸார் அவர்களை வலைவீசித் தேடிவருவதாகவும் கொழும்பிலிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (செ-7)

## அரசின் திட்டங்களை தடுத்தவர்கள் தோல்வியுற்றனர்

(கொழும்பு)

பாராளுமன்றம் மீண்டுமொரு தடவை ஸ்திர நிலையை அடைந்துள்ளது. இதனால் பொது ஜனஐக்கிய முன்னணி அரசாங்கம் பலப்படுத்தப்பட்டுள்ளதென பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

பொரளையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும் போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

1994 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட சகல அம்சங்களும் மக்கள் விடுதலை முன்னணியுடன் (ஜே. வி.பி) செய்து கொள்ளப்பட்ட உடன் படிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

எனவே அரசாங்கம் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கிய சகல அம்சங்களையும் நிறைவேற்றியே தீரும், ஆனால் இவற்றை நிறைவேற்ற முடியாது தடுத்து வருபவர்கள் தோல்வியைச் சந்தித்துள்ளதாகவும் தெரிவித்தார். [ந-5]

## ஐ. தே. க வின் கடின போக்கால் பேச்சுக்கள் முறிவடைந்தன

### லக்ஷ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

முழு தேசத்தையும் மாற்றியமைக்கும் பொறுப்பு தனக்கே உண்டென்ற பாணியில் ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டதாலேயே அவர்களுடனான பேச்சு வார்த்தை முறிவடைந்ததாக வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினிக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்;

மக்கள் விடுதலை முன்னணியுடன் அரசாங்கம் செய்துள்ள உடன்படிக்கையை ஐக்கிய தேசியக்கட்சி மௌனமாக எதிர்க்கிறது. இன்றைய ஜனநாயக நாடுகள் பலவற்றிலும் கூட்டணி அரசாங்கமே நடைமுறையிலுள்ளது. ஆனால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை கவிழ்ப்பதற்கு ஐ. தே. கட்சி எடுத்த முயற்சிக்கு தகுந்தவாறு புரிய வைத்துள்ளோம்.

ஐ தே. கட்சி அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுவார்த்தையில் அமைச்சர் பதவிகளையும் பிரதமர் பதவியையும் எதிர் பார்த்ததே தவிர நாட்டு நலனை கருத்தில் கொள்ளவுமில்லை கருத்தொற்றுமை ஏற்பட வாய்ப்பளிக்கவுமில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-5)

## பருத்தித்துறை பஸ்நிலைய பிரயாணிகள் தங்குமிடம் நாளை திறந்து வைப்பு

(புலோலி)

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் பருத்தித்துறை நகர சபையால் சுமார் 4 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா செலவில் நிர்மாணிக்கபபட்டுள்ள பஸ் நிலைய நேரக்கணிப்பாளர் அலுவலகம் பிரயாணிகள் தங்குமிடம் என்பன நாளை பருத்தித்துறை நகர சபைத் தலைவர் வின் சென்ற் கெனடியினால் சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப் படவுள்ளன.

இதுவரை காலமும் பஸ் பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நேரக் கணிப்பாளர் அலுவலகம் வசதியான பிரயாணிகள் தங்குமிடம் என்பன இல்லாமையால் பயணிகள் பலத்தசிரமங்களை அனுபவித்து வந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த பஸ் நிலையத்தில் குடி நீர் வசதிகளை மேற்கொள்வதற்கு பருத்தித்துறை நகரசபை நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது.

இதற்கென நீர்த்தாங்கியொன்று நிர்மாணிக்கப்படவுள்ளதாகவும் நகரசபைத் தலைவர் தெரிவித்தார்.

பஸ் நிலையப்பகுதியில் மலசலகூட வசதிகள் இல்லாதமை பெருங்குறைபாடாகவுள்ளதாகவும் இக்குறைபாடும் வெகுவிரைவில் நீக்கப்படுமென்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-52)

## இளைஞன் விடுதலை

[வவுனியா]

தமது உறவினரை வெளிநாட்டுக்கு அனுப்பச் சென்றபோது கொழும்பில் வைத்து பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட மட்டு. இளைஞர் ஒருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு இருதயபுரத்தைச் சேர்ந்த ரமேஷ்குமார் (வயது-23) என்ற இளைஞரே கடந்த செவ்வாயன்று உறவினர்களுடன் பஸ்ஸில் பயணம் செய்த போது கைது செய்யப்பட்டவராவார்.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டதையடுத்து விடுதலை செய்யப்பட்டுள்ளார். (உ-4)

ரயில் விபத்தில் பலியானவர்களின்

## உடைமைகளைப் பெற்றுக்கொள்ளவும்

### ரயில்வேத் திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

விபத்துக்குள்ளான 'உடரட்ட மெனிக்கே' ரயிலில் பலியானவர்களின் உடைமைகளைப் பெற்றுக்கொள்ளுமாறுரயில்வேத்திணைக்களம அறிவித்துள்ளது.

கடந்த மாதம் 18 ஆம் திகதி விபத்துக்குள்ளான ரயிலில் பலியானவர்களிடமிருந்து மீட்கப்பட்ட பல உடைமைகள் இன்னமும் அவர்களது உறவினரால் பெற்றுக்கொள்ளப் படவில்லை என்றும், அவை அளாவ பொலிஸ் நிலையத்திலும், ரயில் நிலையத்திலும் வைக்கப்பட்டுள்ளன வென்றும் அவைகளை விரைவில் உறவினரைபெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-7)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு புலிகளுடன் பேசுவதற்கு ஐ. தே. கவுக்கு அழைப்பு

(கொழும்பு)

இலங்கையில் நிலவுகின்ற இனப்பிரச்சினையை ஐக்கிய தேசியக்கட்சியின் அனுசரணையோ, ஆதரவோ இன்றி ஒருபோதும் தீர்க்கமுடியாது,

இந் நிலையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவு வழங்க வேண்டும் என்று நீதி அமைச்சர் பட்டி வீரக்கோன் கேட்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் பட்டிவீரக்கோன் மேலும் தெரிவித்திருப்பதாவது,

இனப்பிரச்சினை தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசியே தீர்வு காணப்பட வேண்டும், விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையின் போது அரசுக்கு உதவும் வகையில் செற்பட ஐக்கிய தேசியக் கட்சிமுன்வர வேண்டும்.

இனப்பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்றால் விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்ததையின் சகல அம்சங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி கலந்து கொள்ள வேண்டும் என்றும் கேட்டுள்ளார். (வ)

## ஆலயம் புனரமைப்பு

(புலோலி)

இந்திய அமைதிகாக்கும் படையினரின் காலத்திலும் அதற்குப் பின்னரும் இடம் பெற்ற வன்செயல்களினால் முழுமையாகச் சேதமடைந்த வடமராட்சி துன்னாலை புளியங்கியான் விநாயகர் ஆலயத்திருப்பணி வேலைகள் சுமார் 50 இலட்சம் ரூபா செலவில்நடைபெற்றுவருகின்றன.

இந்தஆலயப் புனரமைப்புக்கென வடக்கு புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு நிதியில் இருந்து 5 இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ – 52)

## இன்று ஒரு தகவல்

# இடைக் காட்டுச் சித்தர்

இடைக்காட்டுச் சித்தர் என்று ஒருவர் இருந்தார். சித்தர்கள் காலமே கி.பி பத்தாம் நூற்றாண்டு என்று சொல்கிறார்கள். அதற்குப் பிறகு தோன்றியவர் இந்த இடைக்காட்டுச் சித்தர். இடைக்காடு என்கிற ஊரில் பிறந்திருப்பார் போல் இருக்கிறது. ஞானமார்க்கத்தில் மிகவும் பற்றுள்ளவராக இவர் இருந்திருக்கிறார். அவர் கண்டறிந்த உண்மைகளை பாமர மக்களுக்கும் புரிகிறமாதிரிப் பாடினார். பத்தாம் நூற்றாண்டில் அவர் பாடிவைத்த பாட்டெல்லாம் இன்றைய நூற்றாண்டிலிருக்கிற நமக்கும் மிகவும் பொருத்தமாகத்தான் இருக்கிறது.

எதைப் பார்த்தாலும்அதன் மேல் ஆசைப்படுவது மனத்தின் இயல்பு. சிறு பிள்ளையிலிருந்தே இந்தக் குணம் இருந்து கொண்டிருக்கிறது. எத்தனை குழந்தைகள் நிலாவைப் பார்த்து உடனே அதைப் பிடித்துக்கொடுஎன்றுஅடம்பண்ண ஆரம்பித்துவிடும். நம்மால் அது முடியாத காரியம்: நிலாவை இங்கேயிருந்து கையை நீட்டித் தொட வேண்டுமென்றாலே நம்முடைய கையின் நீளம் 2½ இலட்சம் மைல் இருக்க வேண்டும்: அவ்வளவு நீளமான கைக்கு எங்கேபோகிறது? அதனாற்றான் நிலாவைப்பிடித்துக்கொடு என்று குழந்தை அடம் பண்ணினால், நிலாவைப்பிடிக்கிறதுக்குப்பதிலாக அதை இங்கேவா என்று கூப்பிடுகிறோம். நிலா, நிலா ஓடிவா என்றுகூப்பிட்டவுடன் அது ஓடியா வந்து விடுகிறது. ஏதோ அந்த நேரத்துக்கு குழந்தைக்கு ஒரு ஆறுதல். அவ்வளவுதான்.

இதை எதற்குச் சொல்ல வருகிறேன் என்றால் எதுமுடிகிற காரியம்- எது முடியாத காரியம் என்பதை குழந்தையாக இருக்கும் போதேபுரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக அதற்கு தகுந்த மாதிரி பெற்றவர்கள் அதை வளர்க்க வேண்டும், அப்படி வளர்க்காததனால்தான் பெரியவர்களானதற்குப் பின்னரும் பிடிவாத குணம்போகமாட்டேன் என்கிறது.

பயிற்சி இருந்தால்மனதைக் கட்டுப்படுத்துவதற்கு அறிவு நன்றாகப்பயன்படும். மனதை அறிவோடு கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறவன் தான் ஞானி! மனம் என்பது கட்டுக்கடங்காத முரட்டு மாடு என்கிறார் இடைக்காட்டுச் சித்தர் அந்த மாடு ஒருகட்டுக்குள் அடங்கிப் போய் விட்டதென்றால் விடுதலை கிடைத்துவிட்டது என்றுநிச்சயமாகநினைத்துக் கொள்ளுங்கள் என்கிறார் அவர். 'மனமென்னும் மாடு அடங்கின்தாண்டவகோனே முத்தி வாய்த்த தென்று எண்ணேடா தாண்டவக்கோனே!' என்கிறார் அவர்.

மனதை அடக்கி ஆள்வது மட்டும் போதாது, நமதுமனதிலேயே ஒரு பாம்பு இருந்து கொண்டிருக்கிறது; கொடிய விஷப்பாம்பு அது, அதனால் நமக்கும் கெடுதல், மற்றவர்களுக்கும் கெடுதல். அந்தப் பாம்பு நமது மனதிலே குடியிருக்கிற வரைக்கும் நாம் எந்தக் காரியத்திலேயும் வெற்றி பெற முடியாது. நாம்எதை ஆரம்பித்தாலும் வீணாகப் போய் விடும். எதைச் செய்தாலும் சித்தியாகாது. அப்பேர்ப்பட்டபாம்பு எது தெரியுமா? அதுதான் கோபம் என்கிற பாம்பு சினம் என்கிற அந்தப் பாம்பு செத்துப் போனால் அதன்பின்னர் நாம் நினைக்கிறதெல்லாம் நிறைவேறும். கைகூடும்; சித்தியாகும். 'சினம் என்னும் பாம் பிறந்தால் தாண்டவக்கோனே யாவும் சித்திஎன்றே நினையேடா தாண்டவக்கோனே! என்றார்.

அடுத்தது ஆசை என்பது என்ன என்று சொல்கிறார். அது ஒரு பசுமாடாம். அடங்காத பசுவாம். அந்த அடங்காத தன்மை அழிய வேண்டுமாம், அந்தப் பசுவை ஒருஎல்லைக்குள் கொண்டுவந்துவிட்டால் இந்த உலகத்தில் உள்ள உண்மைகள் முழுவதையும் புரிந்து கொள்ளலாம் 'ஆசை என்னும் பசுமாளின் தாண்டவக்கோனே! இந்த அண்டமெல்லாம் கண்டறிவாய் தாண்டவக்கோனே! இப்படி அவர் நிறை அறிவுரைகள் சொல்லிக் கொண்டே போகிறார். ஆகவே முதலில்மனதை அடக்க வேண்டும். இரண்டாவது சினத்தை அழிக்க வேண்டும். மூன்றாவது பேராசைக்கு இடம் கொடுக்கக் கூடாது. கவலையில்லாமல் வாழ்வதற்கு இடைக்காட்டுச் சித்தர் சொல்கிற வழி இவ்வளவுதான்.

இந்தவழி நமக்குக் கேட்கிறதற்கு நன்றாகத்தான் இருக்கிறது: ஆனால், அதைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றால் தான் கொஞ்சம் யோசனையாயிருக்கிறது; பல சந்தர்ப்பங்களில்நாம்ஆசையைப் பிடித்துக் கொண்டிருக்கிறோமா? அல்லது ஆசை நம்மை பிடித்துக் கொண்டுக்கிறதா என்பதையே புரிந்து கொள்ள முடியவில்லை;

ஒருகம்பளி மூட்டை ஆற்று வெள்ளத்தில் மிதந்துபோய்க் கொண்டிருக்கிறது. கரையில் நின்று கொண்டிருந்தவன் அதைப்பார்த்து ஆசைப்பட்டான். உடனே குபீரென்று வெள்ளத்துள் பாய்ந்தான். நீந்திப் போய் அந்தக் கம்பளி மூட்டையைப்பிடித்துகரைக்கு இழுத்தான். அவனால் முடியவில்லை. நீண்ட நேரமாகப் போரடிக் கொண்டிருந்தான். கரையில் நின்று கொண்டிருந்த இன்னொருவன் சத்தம் போட்டான் முடியவில்லை யென்றால் விட்டு விட்டுவந்துவிடு அதற்காக வீணாக எதற்கு அல்லாடிக் கொண்டிருக்கிறாய்? என்றான். அதற்கு அவன் 'நான் இதை எப்போதோ விட்டு விட்டேன், இப்போது இதுதான் என்னை விடமாட்டேன் என்கிறது. ஏனென்றால் இது கம்பளி மூட்டை இல்லைகரடிக்குட்டி' என்றானாம்; □

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

# புரிந்துணர்வு ஒப்பந்தம் ஸ்திர அரசிற்குவழிவகுக்கும்

[கொழும்பு]

பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்கும் ஜே.வி.பியினருக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது ஸ்திரமான ஓர் அரசாங்கம் ஏற்படுவதற்கு வழிவகுத்துள்ளது.

மேற்கண்டவாறு தேசிய சமாதானப் பேரவையினர் தெரிவித்துள்ளனர்;

இது விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

தற்போதைய பொருளாதார மந்த நிலையும், யுத்த சூழ்நிலையும் நாட்டின் அபிவிருத்திக்குத் தடையாக உள்ளன.

இலங்கையில் தற்போது கட்சிகளுக்கு இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் நாட்டின் வெளிநாட்டு உதவிகள் ஒரு போதும் பாதிக்கப் போவதில்லை என்று இலங்கையின் மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

[க]

## பூநகரி முதல் மன்னார் வரையான

# கரையோரக் கிராமங்களில் வரட்சி

# குடிக்கும்நீருக்காகமக்கள்அலைச்சல்

(வவுனியா)

பூநகரி முதல்மன்னார்வரையான கரையோரப் பகுதிக் கிராமங்களில் நிலவும் கடும் வரட்சியினால் அங்கு பெரும் குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் அப்பகுதிகளில் வயிற்றோட்டத்தினால் குழந்தைகள் உட்பட பலரும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 2 வயதுக் குழந்தை ஒன்று சிகிச்சைபலனிக்காதநிலையில் முளங்காவில் மருத்துவ மனையில் மரணமடைந்துள்ளது.

தற்போதைய வரட்சி காரணமாக வன்னியின் மேற்குக் கரையோர கிராமங்களில் மக்கள் குடி நீருக்கு மிகமோசமான நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதால் இக்கிராமங்களில் உள்ள ஆற்றுக்கழிமுகப் படுக்கைகளில் கூவல்களைத் தோண்டி நீரை எடுத்து தமது தேவைகளுக்குப் பயன் படுத்தி வருகின்றனர்;

சிலகிராமங்களில் இந்த நிலையும் இன்றி மக்கள் மிகவும் சிரமபபடுகின்றனர். இதேவேளை, இராணுவக் கட்டுப்பட்டிலுள்ள மன்னார்ப் பகுதிகளில, தேவைக்கும் அதிகமான நீர்வழங்கல் நடைமுறைகள் காணப்படுகின்ற போதிலும் மடு, மாந்தை மேற்கு போன்ற இராணுவக் கட்டுப் பாடற்ற பகுதிகளில் எவ்வித நீர்விநியோகத் திட்டமும் மேற்கொள்ளப்படாதிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (உ)

## படையினர் இருவர் பலி

[கொழும்பு]

கடந்த சனியன்று வவுனியா புதுக்குளம் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட படையினருக்கும், விடுதலைப்புலிகளுக்கும்இடையே ஏற்பட்ட மோதல் சம்பவத்தில் படையினர் இருவர் பலியானதுடன், அவர்கள் தரப்பில் ஒருவர் காயமடைந்ததாக விசேட ஊடகத்தகவல் மையம் விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

## சுற்றிவளைப்பு

(ஈச்சமோட்டை)

ஈச்சமோட்டை கொய்யாத் தோட்டம், பாஷையூர் பகுதிகள் கடந்த ஞாயிறன்று திடீரென சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலுக்கு உள்ளாக்கப்பட்டன.

அதிகாலை வேளை மேற்கொள்ளப்பட்ட இச்சுற்றிவளைப்பால் அங்கு இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

இப் பிரதேசவாசிகளில் 18 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டோர் புனித அந்தோனியார் ஆலய விளையாட்டு மைதானப் பகுதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு தீவிரசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் விடுக்கப்பட்டனர். (உ-59)

## நிதிஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நீராவியடி பிள்ளையார் கோயில் தீர்த்தக்கேணி புனர் நிர்மாணப் பணிக்கென வடக்கின் புனர்வாழ்வு அமைச்சினால் இரண்டு இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது; (உ)

## கண் காட்சியும் பரிசில் வழங்கலும்

(செம்பியன்பற்று)

குடத்தனை தென்னிந்தியத் திருச்சபை ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மலேரியாக் கட்டுப்பாட்டுக் குழுவின் ஏற்பாட்டில் சுகாதார திணைக்கள மலேரியாத் தடுப்புப் பகுதியின் ஆதரவில் கண்காட்சி ஒன்று இடம் பெற்றது:

இக் கண்காட்சியில் மலேரியா விழிப்புணர்வுப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன. (செ-42)

## துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் பலி

(கொழும்பு)

பேராதனை தௌலதெல வட்டதென வீதியில் பொலிஸாருக்கும் இனந்தெரியாத நபர்களுக்குமிடையில் இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

மேற்படி பகுதி சோதனைச் சாவடியில்வாகனத்தை நிறுத்தாமல் பொலிஸாரின் உத்தரவையும் மீறி சென்ற வாகனத்தை பின் தொடர்ந்த பொலிஸார் மீது வாகனத்தில் சென்றோர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் இதனையடுத்து இரு பகுதியினருக்கும் இடையே மோதல் இடம்பெற்றதாகவும் தெரியவந்துள்ளது. (உ - 5)

## நாட்டுக்கு நல்லாசி வேண்டி

# புத்தரின் புனிதத் தந்தம் மக்கள் தரிசனத்துக்கு

(கண்டி)

நாட்டுக்கும் மக்களுக்கும் நல்லாசி வேண்டி கண்டி ஸ்ரீதலதா மாளிகையின் புனிதத்தந்தம் எதிர் வரும் 22ஆம் திகதி மக்கள் தரிசனத்துக்காக வைக்கப்படவுள்ளது.

இப்புனிதத் தந்தத்தைமக்கள் பார்வைக்கு வைப்பதற்கானவிசேடதங்கப்பேழையை தாய்லாந்து அரசாங்கம் அன்பளிப்புச் செய்யவுள்ளது.

20 பிக்குமார் உள்ளிட்ட 150 பேர்கொண்ட தாய்லாந்தின் விசேட பிரதிநிதிகள் இம் மாதம் 19ஆம் திகதி இதனை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவிடம் கையளிப்பர். (உ)

## அரச ஊழியர்களுககு

# சலுகை விலையில் உணவுப் பொருட்கள்

(கொழும்பு)

அரசாங்க ஊழியர்களுக்குச் சலுகை விலையில் அத்தியாவசியப் பொருட்களை வழங்குவதற்கான நடவடிக்கையை உணவு சந்தைப்படுத்தல் அமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

இதன் பிரகாரம் அரிசி, பருப்பு, சீனி, கருவாடு, பால்மா என்பன சலுகை விலையில் வழங்கப்படவுள்ளதாக மேற்படி அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

மரக்கறி மற்றும் பால் சார்ந்த உணவுப் பொருட்களையும் சலுகைவிலையில் வழங்க கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் முன் வந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது. (உ)

## பல்கலை மாணவன் திவ்வியன்

# விடுதலை தொடர்பாக துணுக்காயில் கூட்டம்

(வவுனியா)

யாழ். பல்கலைக்கழக மாணவன் திவ்வியனை விடுதலை செய்வது தொடர்பான கூட்டம் ஒன்று அண்மையில், துணுக்காய் வலய பல்கலைக்கழக மாணவர்களது பெற்றோர் சங்கத்தின் ஒழுங்கில் இடம் பெற்றது.

பாண்டியன் குளத்தில் இடம் பெற்ற இக் கூட்டத்தில், திவ்வியனின் விடுதலை தொடர்பாக ஆராயப் பட்டதுடன் அவரைவிடுதலை செய்ய வேண்டுமெனக் கோரி சம்பந்தப்பட்டவர்களுக்கு மகஜர் ஒன்று அனுபபுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் மல்லாவி பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் செம்மணன், துணுக்காய் வலய பல்கலைக் கழக புகுமுக மாணவர் ஒன்றியத்தலைவர் பிரதீபராஜ் உட்பட மற்றும் பலர் கலந்து கொண்டனர். (உ-5)

# வட-கிழக்குபாடசாலைகளில் நிலவும் பௌதீகவள பிரச்சினைகள் நீங்கும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளுக்குத் தேவையான பௌதீகவளங்களை வழங்க உடன் நடவடிக்கை எடுக்குமாறு கல்வியமைச்சர் சுசில் பிரேமஜெயந்த பணிப்புரை விடுத்துள்ளார்;

வடக்கு-கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்ட அரசாங்க அதிபர்கள் மற்றும் கல்வித் திணைக்கள உயரதிகாரிகளுக்கான விசேட மாநாட்டில் இப்பணிப்புரை விடுக்கப்பட்டது.

மேற்படி பகுதிப் பாடசாலைகளில் கட்டடம், மற்றும் ஆசிரியவளம் போன்றவற்றுக்கு நிலவும் தட்டுப்பாட்டினால் கல்வி நடவடிக்கைகளில் ஏற்பட்டுவரும் பின்னடைவுகள் குறித்து கல்வியமைச்சரின் கவனத்தின் கீழ் கொண்டுவரப்பட்டதையடுத்தே அமைச்சர் மேற்கண்டவாறு பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ)

## நக்ஸலைட்டுகளில் இணையும் இளைஞர் அணியினர்

### தடுப்பது அவசியம் என்கின்றார் அமைச்சர்

(போபால்)

மத்திய பிரதேஷ் மற்றும் மாநிலங்களில் இளைஞர்கள் நக்சலைட்டுகளில்சேர்வதைத் தடுக்க அமைப்புக்கள் முன்வர வேண்டும் என்று மந்திரி உமா பாரதி கேட்டுள்ளார்.

நக்ஸலைட்டுகள் அதிகமாக இருக்கும் பிரதேசங்களில் பழங்குடி இளைஞர் அதில் இணைந்து கொள்ளாது தடுப்பதற்கு முன்னேற்றப் பணிகளைப் பெருமளவில் எடுக்கும்படி நேரு இளைஞர் மன்றத்தைக் கேட்டுக் கொண்டார்.

நேரு இளைஞர் மன்றஒருங்கிணைப்பாளர் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இதனைவலியுறுத்தினார்.

தவறான வழிகளில் செல்லாது இளைஞர்களை வழி நடத்துவது இம் மன்றத்தின் செயற்பாடு ஆகும் என்று உமா பாரதிமேலும் தெரிவித்தார். (து)

# மாணவிகள் பயணித்த பேருந்து கண்ணி வெடியில் சிக்கியது

### ஒருவர் பலி பலரின் நிலை கவலைக்கிடம்

(ஸ்ரீநகர்)

காஷ்மீரில் பாடசாலை மாணவிகளை ஏற்றிச் சென்ற பேருந்து ஒன்று கண்ணி வெடியில் சிக்கியதில் 11 வயதுச் சிறுமி உடல் சிதறிப் பலியானதுடன்ஏனையோரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுகிறது.

காஷ்மீரில் இருந்து சுற்றுலாவுக்காக ஸ்ரீ நகருக்கு 56 மாணவிகளை ஏற்றிச் சென்ற போதே இவ் விபத்து இடம் பெற்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இச்சம்பவத்தில்மாணவிகள் பலர் அவயங்களை இழந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, இச்சம்பவத்துக்குயாரும் உரிமைகோராத போதிலும் அண்மைக் காலத்தில் காஷ்மீரில் தீவிரவாதிகளின் கண்ணிவெடித்தாக்குதல் அதிகரித்திருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-7)

## கடற் கொள்ளையரிடமிருந்து தமிழக மீனவர்கள் மீட்பு

(விஜயவாடா)

ஆந்திரப் பிரதேசக்கடற் கொள்ளையர்களிடமிருந்து 120 தமிழக மீனவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த மாதம் ஆந்திர கடற் பிராந்தியத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்த நூற்றுக்குமதிகமான மீனவர்களை ஆந்திரக் கடற் கொள்ளையினர் வள்ளங்களுடனும் மீன்களுடனும் சிறைப்பிடித்தனர்.

அடிக்கடி ஆந்திரக் கடற் பகுதிகளில் வெளிநாட்டு மற்றும் வெளிமாநில கப்பல்கள் கொள்ளையர்களால் சூறையாடப்பட்டு வருகின்றது.

கடந்த 31 ஆம் திகதி ஆந்திர கடல் எல்லைக்குள் திசை தெரியாமல் சென்ற தமிழக மீனவர்களைக்கடற் கொள்ளையினர் பிடித்துச் சென்றனர்.

இது தொடர்பாக தமிழக அரச அதிகாரிகளும் மீனவ சங்கப் பிரதிநிதிகளும் ஆந்திராவிற்குச் சென்று பெருந் தொகைப் பணம் கொடுத்தே மீனவர்களை மீட்டு வந்தனர். (து)

## பிஜி ஆளுங்தேசியவாதக்கட்சியுடன் இணைய சௌத்திரி இணக்கம்

(சுபா)

கடந்த வெள்ளியன்று பிஜியில் இடம்பெற்ற தேர்தலின் பிரகாரம் அந்நாட்டின் பிரதமராகதேர்ந்தெடுக்கப் பட்டுள்ள தேசியக் கட்சித்தலைவர் லைபேனியா கறாசி, தம் கட்சியுடன் இணைந்து ஆட்சியமைக்க வருமாறு பிஜியின் முன்னாள் பிரதமர் மகேந்திர சௌத்திரிக்கு விடுத்த அமைப்பை அவர் ஏற்றுக் கொண்டுள்ளார்.

தேர்தல் இடம்பெற்ற 71 தொகுதிகளிலே 31 தொகுதிகளில் தேசியவாதக் கட்சியும், 27 தொகுதிகளில் மகேந்திர சௌத்திரியும் வெற்றிபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

1997 ஆம் ஆண்டில் பிஜியில் கொண்டுவரப்பட்ட புதிய அரசியலமைபின் படி 8தொகுதிகளில் வெற்றிபெற்ற கட்சிகளும் கட்சியுடன் கூட்டுச் சேர முடியும் என்றவிதிமுறைக்கமையவே புதியபிரதமரின் அழைப்பு அமைந்துள்ளது.

இதேவேளை, கடந்த வருடம் பிஜியில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து பொது நல வாய நாடுகளின் அமைப்பிலிருந்து இந்நாடு நீக்கப்பட்ட போதிலும் ஜனநாயக முறையில் தேர்தல் நடந்து முடிந்ததை படுத்து அவ்வமைப்பில் மீண்டும் இதணைத்துக் கொள்ளப் பட்டுள்ளது.

கடந்த 1999 ஆம் ஆண்டில் இடம் பெற்ற இராணுவப் புரட்சியின் பின் மேற்படி அமைப்பில் இருந்து நீக்கப் பட்ட பாகிஸ்தான் இன்னும் இணைத்துக் கொள்ளப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (து-7)

## இந்திய எல்லைப் பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்த பேச்சு

(டாக்கா)

இந்திய எல்லைப் பாதுகாப்புப்படையினருக்கும் பங்களாதேஷ் ரபிள் படையினருக்குமிடையே முக்கியத்துவம் வாய்ந்தகூட்டம் நடைபெற்று வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. நேற்றுமுன்தினம் அகத்தலாவில் ஆரம்பமான கூட்டம் தொடர்ந்து நான்கு நாட்கள் இடம்பெறுமென்று அறிவிக்கப்படுகிறது.

இக் கூட்டத்தில் எல்லைப் புறநிர்வாகத்துக்கான வரையறைகள் அமைப்பது உட்பட பல முக்கிய விடயங்கள் விவாதிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.

இதற்கிடையில் பங்களாதேஷில்வர இருக்கின்ற தேர்தலையொட்டி இந்திய- பங்களாதேஷ் எல்லைப் பாதைகளை அடைத்து விடும்படி பராமரிப்பு அரசுத் தலைவர் ரைபிள் படையினரையும் எல்லைப்புற இந்தியப் படையினரையும் கேட்டுள்ளார். (து)

### உளவாளிகளால் ஆயுதக்கடத்தல்

(இலண்டன்)

அகதிகளைப்போல் வேடமிட்ட ஈராக் உளவாளிகள் பிரிட்டனுக்குள் ஆயுதங்களை கடத்தி வருகின்றார்கள் என பிரிட்டன் பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. (செ)

## ஆஸிக்கு எதிராக செச்சினியாவில் பேரணி

(பொஸ்னியா)

அவுஸ்திரேலியா, அகதிகளை உள்வாங்குவதில்லை என்ற தீர்மானத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்து செச்சினியாவில் பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

அண்மையில்அவுஸ்திரேலியா நோக்கிச் சென்ற 434 அகதிகளை அந்நாடு ஏற்கமறுத்த போதும், நடுக்கடலில் தத்தளித்த அவர்களை பல்வேறு நாடுகளும் ஏற்க முன்வந்தள்ளமையும், அவுஸ்திரேலியாவின் செயலுக்குப் பல்வேறு தரப்புக்களில் இருந்தும் கண்டனங்கள் எழுந்துள்ளமையும் தெரிந்ததே.

மேற்படி பேரணியில் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்ட செச்சினியர் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக கோஷமிட்டுச் சென்றதாக தெரியவந்துள்ளது. (து)

## போதைப் பொருள் கடத்தலுக்கு எதிராக முழுமூச்சில் நடவடிக்கை

(மணிலா)

போதைவஸ்து கடத்தலுக்கு எதிராக பிலிப்பைன்ஸ் அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இப்பிரச்சினை முறையாகத் தடுக்கப்படாவிட்டால் பிலிப்பைன்ஸ் ஆசியாவின் கொலம்பியாவாக மாறக் கூடுமென்றும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி 'குளோறியா மகாபகல அரோயா' தெரிவித்துள்ளார்.

இலத்தீன் அமெரிக்க நாடான கொலம்பியாவில் போதைப் பொருள் கடத்தல் காரர்களில் தனக்குத் தேவையானவர்களையே அதிகாரிகளாக நிறுத்திவைக்க முடிகிறது. இந்த நிலை பிலிப்பைன்ஸில் ஏற்படுவதை அனுமதிக்க முடியாது என அறிக்கை ஒன்றில் தெரிவித்த அரோயா, இது தொடர்பாக தனக்கு இருக்கும் அனைத்து அதிகாரத்தையும் பயன்படுத்தப் போவதாகத் தெரிவித்தார். (உ-7)

### மேலதிக நிவாரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ் குடாநாட்டில் வசிக்கும் இடம்பெயர்ந்த மக்களுக்கு மேலதிக நிவாரண உதவிகளைவழங்குவதற்கான நடவடிக்கைகளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசின் அனுசரணையுடன் மேற் கொண்டுள்ளனர். (உ)

## வெவ்வேறு விபத்துக்களில் ஏழு பேர் உயிரிழப்பு

ஹோமாகமப் பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் சிறுவர்கள் மூன்று பேர் உட்பட ஐந்து பேர் பலியாகியுள்ளனர்.

நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்ற அதே வேளை குளியாப்பிட்டிய பகுதியிலும் மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் பலியாகியுள்ளனர்.

குடிபோதை, மற்றும் கவனயீனம் போன்ற தவறுகளால் இவ்விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (செ-7)

### வாலிபர் வட்டம் நிகழ்ச்சி ஒலிபரப்பு

(ஈச்சமோட்டை)

யாழ். மாவட்டத்தில், வளர்ந்துவரும் கலைஞர்களின் திறமைகளை வெளிக்கொணரும் வகையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன யாழ். சேவையில் பிரதி வியாழன் தோறும் வாலிப வட்டம் என்னும் நிகழ்ச்சி ஒலிபரப்பப்பட்டு வருகின்றது. (உ-59)

உலக தரிசனம்

## பிரதேச செய்தியாளர் தேவை பிரிவு-2

வலம்புரிப் பத்திரிகைக்கு பின்வரும் பிரதேசங்களுக்குச் செய்தியாளர்கள் தேவை.

தகுதி: க. பொ. த. உயர்தரத்தில் மூன்று பாடம் சித்தி.

**பிரதேசங்கள்**

மருதனாமடம், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பழை, ஏழாலை, மானிப்பாய், கொடிகாமம், வரணி, மிருசுவில் மீசாலை, கொழும்புத்துறை, குருநகர், நாவாந்துறை, பாஷையூர், நல்லூர், வல்வெட்டித்துறை, தொண்டைமானாறு கரணவாய், நீர்வேலி, புத்தூர், அச்சுவேலி, ஆவரங்கால், இடைக்காடு

விண்ணப்பங்கள் யாவும்

ஆளணி முகாமையாளர்
''வலம்புரி''
இல 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 15-09-2001 இற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும்.

குறிப்பு:- விண்ணப்பக் கடிதஉறையின் இடது பக்க மேல்மூலையில் 'பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்' எனத் தவறாது குறிப்பிடவும்.

- நிர்வாகம்

## அம்பேத்கார் சட்டத்தைக் கிழித்து ஆட்சி பீடமேறிய செல்வி ஜெயலலிதா

(சென்னை)

ஊழல் செய்தவர்கள் நல்லாட்சியை நடத்த முடியாது என்று சட்ட சபைத் தேர்தலுக்கு முன்பே கூறியிருந்தேன் என்று பா. சிதம்பரம் தெரிவித்தார்.

சென்னையில் நடந்த த.மா.கா. ஜனநாயகக் கழகக் கூட்டத்தில் அவர் மேலும் கூறுகையில் தேர்தல் முடிந்து நூற்றுக்கு மேற்பட்ட நாட்களாகி விட்டன. நான் தேர்தலுக்கு முன் பேசியதை மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அ.இ. அ. தி. மு. க. அரசு நல்லாட்சியைத் தர முடியாதென்று கூறியிருந்தேன்.

தேர்தல் முடிந்து இவ்வளவு நாட்களாகியும் மாநிலத்திலுள்ள மாவட்டங்களுக்குச் சென்று மக்கள் குறைகளை அறியவில்லை, காவிரி நீர்க் கூட்டம், தேசிய அபிவிருத்திக் கூட்டம் என்பவற்றிற்கு செல்ல நேரமில்லை, வழக்குகள் பற்றி ஆராயவும் சிந்திக்கவுமே அவருக்கு நேரம் போதாது என்று பா. சிதம்பரம் தெரிவித்தார்

காக்கிச் சட்டையின் அட்டகாசமும் எதிர்க் கட்சியினர் தாக்கப்படுவதும், பத்திரிகையாளர்கள் தாக்கப்படுவதும் தான் மூன்றுமாதத்தில் உருப்படியாக நடந்திருக்கிறது. அம்பேத்காரின் அரசியல் திட்டத்தைக் கொழுத்தி விட்டுத்தான் ஜெயலலிதா ஆட்சிக்கு வருவார் என்று நான் அன்றே கூறினேன். அது இப்பொழுது கை கூடுகிறது என்று அவர் தொடர்ந்து பேசுகையில் கூறினார். (து)

குணநலம் சான்றோர்
நலனே பிறநலம்
எந் நலத்து உள்ள தூஉம்
அன்று
குறள்

வலம்புரி

## சட்ட ரீதியில் பாரபட்சம்

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை உணர்ந்த சிங்களமக்களும் உள்ளார்கள் என்பதற்கு கலாநிதி விக்கிரமபாகுகருணாரட்ண நல்லதோர் உதாரணம். அன்று முதல் இன்றுவரை தமிழ்மக்கள் சுதந்திரமாக வாழவேண்டுமென்ற கொள்கையிலிருந்து இம்மியும் விலகாதவர் அவர்.

மேல் மாகாணசபையின் உறுப்பினரானஅவர் அண்மையில் ''தமிழ் மக்கள் சிறைகளில் அடைத்து வைக்கப்படுதல்'' தொடர்பான ஓர் பிரேரணையைக் கொண்டு வந்தார். அப்பிரேரணையில்சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் இளைஞர்கள் மீது சட்டமாதிணைக்களம் பாரபட்சம் காட்டி வருகிறதென்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. உலகறிந்த-நாடறிந்த உண்மையொன்று மேல்மாகாண சபையில் ஒலித்திருப்பது சட்டமாதிணைக்களத்திற்கு விழுந்த பலத்த அடியென்றே கூற வேண்டும்.

கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ண கொண்டு வந்த பிரேரணைமீதுமேல் மாகாண சபை உறுப்பினர் மனோகணேசன் சட்டமா திணைக்களம் குறித்துத் தெரிவித்த அனைத்து விடயங்களும் மறுதலிக்க முடியாத உண்மை கைதான தமிழ் இளைஞர்கள் விளக்கம்-விசாரணையின்றி வருடக்கணக்கில் சிறைகளில்வாடுவதும், சித்திரவதைக்குள்ளாக்கப்படுவதும்சட்டமாதிணைக்களம் அறியாத விடயங்களல்ல.

எனினும் சிங்களவர், தமிழர் என்ற இனத்துவேஷத்துடன், நீதியைப் பரிபாலிக்க வேண்டிய ஓர் அமைப்பு செயற்படுமாயின் அஃது நாட்டின் அழிவுக்கே வித்திடும்.

அத்தகையதொரு பாரபட்சப் போக்கையே சட்டமா அதிபர் திணைக்களம் மேற்கொள்கிறதென்ற உண்மை மேல் மாகாண சபையூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் இளைஞர்கள் யுவதிகள் சிறைக்கூடங்களில் பெற்றவர்களை, உறவுகளைப் பார்க்க முடியாது மனவேதனையுடன்காலத்தைக் கழிக்கின்றனர். பரந்துபட்ட இவ்வுலகில் சிறைக்கூடங்கள் என்பதே தமிழினத்திற்காக கட்டப்பட்டவை போல்உள்ளது

எதுவாயினும் நீதியை, சட்டத்தை பாதுகாக்க வேண்டிய சட்டமா திணைக்களம்,பாரபட்சத்துடன் நடக்குமாயின் அஃது இலங்கைத்தீவின் அழிவிற்கு அடித்தளமிடுமென்பது திண்ணம்.

# உணவு சக்தியைக் கிரகிக்கும் மண்ணீரலில் ஏற்படும் சோர்வு நீரிழிவுக்கு வழிகோலும்

சளி,ஜலதோஷம் ஏற்படுவதுஎவ்வாறு? எந்த ஒருஉணவும்வயிற்றுக்குச் சென்றதும் அவ்வுணவின் சக்தியானது. மண்ணீரலால் கிரகிக்கப்படுகிறது. மண்ணீரலின் இந்தக் கிரகிப்புச் சக்தியானது எங்கிருந்து கிடைக்கப் பெறுகிறதென்றால் உணவானதுவாயில் உமிழ்நீருடன் கரையும் போது தான். உணவு உமிழ் நீருடன் கரையத் தொடங்கிய மறுகணமே இந்தச் சத்தியானது வயிறு, மண்ணீரல், நுரையீரல், இருதயம் ஆகிய நான்கு உறுப்புகளின் இயக்கத்திற்கு உடனடியாக சக்தியை அளிக்கிறது: உணவு வாயில் உமிழ்நீருடன் கலந்தபின்பு எவ்வளவு நேரம் வாயிலேயே மேலும் மேலும் கரைகிறதோ, அந்த அளவுக்கு மேற்சொன்ன 4 உறுப்புகளின் இயக்க சக்தியின் திறனும் அதிகரிக்கிறது:

வயிற்றின் இயக்கசக்தியின் பாதிப்பினால் ஏற்படும் கோளாறுகளைப் பற்றி ஏற்கனவே பார்த்தோம். மண்ணீரல் சம்பந்தமான நோய்களைப் பற்றியும்,குறிப்பாகக் கர்ப்ப சம்பந்தமான பெரும்

## மருத்துவ விளக்கம்

பாலான நோய்களுக்கு மண்ணீரல் பாதிப்பு எவ்வாறு காரணமாக அமைகிறது என்பதைப் பற்றியும் பார்ப்போம்.

மண்ணீரல் சக்தி நாளத்தின் சக்திபாதை பெருவிரல் நகக்கண்ணின் புள்ளியிலிருந்து ஆரம்பித்து இரண்டு கால்களின் உள்புறமாக மூட்டுக் காலுக்கு ஏறுகிறது. பின்னர் இரு தொடைகள் வழியாக மேலேறி வயிற்றின் இருபுறங்களிலும் வியாபித்துமார்பகத்தை அடைந்து கடைசியாக அக்குளுக்குக் கீழே விலாப்புறத்தில் முடிவடைகிறது மண்ணீரலுக்குச் சக்தியளிக்கக்கூடிய இந்தச் சக்தி நாளம் வெளிப்புறச் சூழலிலிருந்து தோலின் இப்பாதை வழியாக மின் சக்தியைக் கிரகிக்கிறது. இப்பாதையில் ஏதேனும் ஒருபாகம் வெளிப்புறச் சூழலின் மின்சக்தியைக் கிரகிக்கத் தவறினால் மண்ணீரலின் குறிப்பிட்ட ஒரு பாகம் ஒரு குறிப்பிட்டசெயல் திறனை இழக்கிறது.

மண்ணீரலின் செயல் பாட்டில் மிகவும் விசேஷமானது. உணவிலிருந்து உயிர்ச் சக்தியைப் பிரித்தெடுப்பதாகும். இது மண்ணீரலின் பல விதமான செயல்திறனும் ஒட்டுமொத்தமாக இயக்கம் கொண்டால் மட்டுமே சாத்தியமாகும். உணவிலிருந்து உயிர்ச்சக்தி பிரித்தெடுக்கப் படவில்லையாயின்: உயிர்ச் சக்திஓட்டம் மண்ணீரல்சக்தி நாளத்தினுள் ஊடுருவாமல் மண்ணீரலையும் பாதிக்கிறது. இவ்வாறாக தொடர்ச்சியாக சக்தி ஓட்டம் சக்தி நாளத்திலும், மண்ணீரலினுள்ளும் படிப்படியாகக் குறைந்து மண்ணீரல் சோர்வை ஏற்படுத்துகிறது. மண்ணீரலில் உருவாகும் இந்தச் சோர்வுதான் பிற்காலத்தில் நீரிழிவு நோய் ஏற்படக் காரணமாக அமைகிறது: ஆம்! கணையம் என்ற உறுப்பின் இயக்கத்திறன், மண்ணீரலின் உறுதியான செயற்திறனைப் பொறுத்தே ஆகும்:

தொகுப்பாளர்
ஐ. பி இளையப்பெருமாள்

இந்தத் தொடரில் மண்ணீரல் சக்தி நாளம். மற்றும் மண்ணீரல்உறுப்பின் சோர்வு ஒருவரிடத்தே என்னென்ன நோய்களைத் தோற்றுவிக்கக் கூடியதாக உள்ளது என்பதைப் பார்ப்போம்.

### ஜலதோஷம், சளி, தும்மல்

சளி, ஜலதோஷம், தும்மல் போன்றவை ஒரு மனிதனுக்கு ஏற்படும் நோய்களுக்கெல்லாம் ஆரம்பக்கட்ட அறிகுறிகளாகும். இந்தத் தொந்தரவுகள், தோன்றாமல் உடலில் எந்த நோயும் அவதரிப்பதில்லை. சளி, ஜலதோஷம், தும்மல் ஆகிய உபாதைகள் மண்ணீரல் சோர்வை நீக்கி அதிலுள்ள ஈரச்சத்தை அகற்றக் கூடிய செயலாகும் சாதாரணமாக மண்ணீரல் தன் இயக்க சக்தியை காற்றலைகளின்நிலைகளிலேயேகொண்டுள்ளது. அதில் ஈரப்பதன் இருக்கக்கூடாது. மண்ணீரலானது காய்ந்து ஈரப்பதமின்றி இயக்க நிலையிலேயே இருக்க வேண்டும். இயக்க நிலைக்கு சக்தியானது சீரான வெப்ப நிலையிலேயே இருக்க வேண்டும். இப்போது மண்ணீரலின் வெப்ப நிலை எவ்வாறு கெடுதலுக்குள்ளாகிறது என்பதைப் பார்ப்போம்:

மண்ணீரலின் பிரதான வேலைகளில் ஒன்றை இப்போது மீண்டும் ஒரு முறை நினைவு கூர்வோம். அதாவது நீர், உணவுஆகியவற்றிலுள்ள உயிர்ச் சக்தியைப்பிரித்தெடுப்பதாகும். உணவாக இருக்கட்டும்; அல்லது நீராக இருக்கட்டும் சுற்றுச் சூழலின் வெப்ப நிலையில் அவற்றை உண்ணுவதும், பருகுவதும் தான் மண்ணீரலின் எந்தச் சூழ்நிலையிலும் ஈரச்சத்து தேங்காமல் பாதுகாக்கும். இதைத் தவிர்த்து அதிகமாகக் குளிர்ந்தோ அல்லது மிகவும் சூடாகவோ உண்ணுவதும் பருகுவதும் மிதமிஞ்சிய வெப்பம் அல்லது குளிர்ச்சி மண்ணீரலால் கிரகிக்கப்பட ஏதுவாகிறது.

இப்போது சூடாக உணவருந்தும் போதுஏற்படும் நிகழ்வுகள் என்ன என்பதைத் தெரிந்து கொள்வோம். எந்த உணவும், நாக்கில் உமிழ் நீருடன் கரையும் போது அதன் உயிர்ச்சத்தியானது வயிறு, மண்ணீரல் நுரையீரல், இதயம் ஆகியவற்றால் கிரகிக்கப்படுகிறது என்பதை நாம் ஏற்கனவே அறிந்திருக்கிறோம். இந்த உயிர்ச் சக்தியானது வெளிப்புறச் சூழலின் வெப்பநிலையுடன் சமன் பட்டிருக்குமானால் இவ்வுறுப்புகள் நான்கும் எந்தக் களைப்புமின்றி இயங்கும். அதேசமயம் உணவின் வெப்பநிலை மிதமிஞ்சி இருக்கும் போதுசுடச்சுட ஆவிபறக்கநாக்கால்ருசிக்கும் போது வயிறு, மண்ணீரல், நுரையீரல், இருதயம் ஆகிய நான்குஉறுப்புகளிலும் வெப்ப சக்தி அதிகமாகிக் காய்ச்சல் நிலையைத் தோற்றுவிக்கிறது.

### காய்ச்சல்

ஜுரம் அல்லது காய்ச்சல் நமக்கு ஏற்படும் போது நம்மால் எவ்வாறு எந்த வேலையையும் செய்யமுடியாமல் சோர்ந்து படுத்து விடுகிறோமோ அவ்விதமேசூடான உணவுப் பொருட்கள் மேற்சொன்ன நான்கு உறுப்புகளில் களைப்பையும் அசதியையும் தேற்றுவிக்கின்றன. இந்நான்கு உறுப்புகளும் வெப்பமிகுதியால் நோய் வாய்ப்படுகின்றன. இனி ஒவ்வொரு உறுப்பிலும் சூடான உணவுப்பொருட்கள் என்னென்ன தொந்தரவுகளைத் தோற்றுவிக்கிறதுஎன்பதைப் பார்ப்போம்.

### வயிற்றில் ஜுரம்

எந்த ஒரு உறுப்பின் இயக்கத்திற்கும் வெப்பம் தேவைப்படுகிறது என்பது நமக்குத் தெரியும. இந்த வெப்பம் அதிகமாக்கப்படும் போது (உதாரணமாக சூடான உணவு உட்கொள்ளும்போது) மிகவும் தற்காலிகமாக வயிற்றின் இயக்கம் அதிகரிக்கிறது, இயக்கம் ஏற்படுத்தி அளவுக்கதிகமான உணவை வயிற்றுக்குள் ஏற்றுக் கொள்கிறது; ஆனால் கூடிய சீக்கிரமே உணவானது முழுமையாக வயிற்றில் ஜீரணமாகும் முன்பே, அவ்வுறுப்பானது களைப்படையும். சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே. வயிறு இயக்கம் குறைந்து கனத்து வருவதை உணரமுடியும். ஏப்பம்வர ஆரம்பிக்கும். (குறிப்பு: சாப்பிடும் போது எந்த நிலையில் முதல் ஏப்பம் வருகிறதோ, அப்போதே அது எவ்வளவு ருசியான சாப்பாடாக இருந்தாலும் சரி, எவ்வளவு நாட்கள் பட்டினிக்கப்புறம் நீங்கள் உண்ணும் முதல் உணவாக இருப்பினுசரி அந்த வேளை உணவை நிறுத்திக் கொள்ளுங்கள்) தாகமும் பசியுடன் கலந்தே எடுக்க ஆரம்பிக்கும்.

### தாகமும் பசியும்

இயற்கையாகவே. தாகமும் பசியும் ஒரேநேரத்தில் இருக்காது ஒன்றில் பசி இருக்கும். இல்லையெனில் தாகம் இருக்கும். சாதாரணபசி இருக்கும் போது தண்ணீரைத் தவிர்க்க வேண்டும். தாகம் இருக்கும் போது உணவு உண்ணுவதை சற்று நேரம் தள்ளிப்போட வேண்டும். அளவுக்கதிகமான தாகம் இருக்குமேயானால் சாதாரண தண்ணீரையே குடிக்க வேண்டும். குளிர்ந்த நீர் அல்லது ஐஸ்வாட்டர் நிச்சயமாக தாகத்தைத் தணிக்காது. உதாரணமாக, தாகம் இருக்கும்போதுஐஸ்கிறீம்சாப்பிடுவோமானால் தண்ணீர் தாகம் இன்னும் அதிகமாகும். எவ்வளவுதான் குளிர்பானங்கள் அருந்தினாலும். சாதாரண தண்ணீரைக் குடிக்கும் வரையில் தண்ணீர் தாகம் குறையாது. குளிர்பானங்கள் குடித்த பிறகும் குறையாது: தண்ணீர் தாகத்தைத் தண்ணீரைக் குடித்துக் குறைக்கத் தவறினால் நிச்சயமாக வயிறு பழுதடையும்,

தாகம் என்பது வயிற்றில் வெப்பம்அதிகமாகஇருப்பதை உணர்த்துகிறது. இந்தவெப்பம் தண்ணீரால் தணிக்கப்படும்போது வயிற்றின் இயக்கம் சகஜ நிலையை அடைகிறது. மாறாக. ஐஸ் வாட்டர், குளிர் பானங்கள் அருந்தும்போது வயிற்றினுள் உள்ளவெப்பம் மட்டுமல்ல, வயிற்றின் திசுக்கள். தசை நார்கள் அனைத்தும் திடீரென குளிர்விக்கப்படுகின்றன. இவ்வாறு குளிர்விக்கப்படும் போது, உடனடியாக வயிற்றின் தசை நார்களும், திசுக்களுந் இயற்கைக்கு மாறான இந்தக் குளிர்ச்சியை தன்னுடைய வெப்ப ஆற்றலை (எதிர்ப்பு சக்தியை) வெளியேற்றி வயிற்றின் இயற்கையான இயக்க சக்தியைப் பேணக்கூடிய வேலையைச் செய்கிறது. குளிர்ந்தபானங்களை அருந்துவதைவாடிக்கையாகக் கொள்வார்களேயானால், வயிற்றின் இயற்கையான வெப்ப ஆற்றல் வெகுவாகக் குறைந்து, வயிறு தளர ஆரம்பிக்கிறது. வற்றின் கொள்ளளவு அதிகரிக்கிறது. இதன் காரணமாகப் பொய்யான பசியுணர்வு அதிகரிக்கிறது.

வயிறு தளர்ச்சியடைந்து தன்னுடையகட்டுக் கோப்பானநிலையிலிருந்துதளர்ந்து பெருக்கும்போது, உணவானது. முறையாகத் தண்ணீர் அருந்துவதைத்தவிர்க்கவேண்டும். உணவு அருந்திக்கொண்டிருக்கும்போது. தாகம் எடுக்குமேயானால் அறிந்து கொள்ளவேண்டியது என்னவென்றால், உணவில இயற்கைக்குமாறான சூடு கலந்திருக்கிறது என்பதையே. காரமான உணவுப் பொருட்கள் மிகவும் கேடான வெப்ப நிலையை வயிற்றில் தோற்றுவிக்கும். இந்த வெப்ப நிலையில்போதுதான் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே ஐஸ்வாட்டர் குடித்தே ஆகவேண்டும் என்ற நிலைக்கு ஆளாகிறார்கள். எனவே, பசி எடுத்து உணவு உட்கொள்ள ஆரம்பித்துவிட்டால், உணவைச் சாப்பிட்டு முடிக்கும்வரை தாக உணர்வு தலையெடுக்காத வகையில், இயற்கையான உணவுகளை மிதமான வெப்பத்தில், புளி காரம் அதிகமில்லாமல் உட்கொள்ளுதல் மிகவும் நன்மையான முறையாகும்.

(தொடரும்).

## தினசரி தியானம்

### புதுப்பித்தல்

சிந்திக்கும் தோறும்
தெவிட்டா அமுதே என்
புந்திக்குள் நீ தான்
பொருந்திடவுங் காண்பேனோ?

-தாயுமானவர்-

பெரிய பொருளே, உன்னைப் போற்றுமளவுஎன்னை நான் பண்புடையவனாகப் புதுப்பித்துக்கொள்கிறேன்.

இயற்கையானது ஓயாது தன்னைப் புதுப்பித்துக் கொள்கிறது. ஆதலால் அது என்றும் புத்தம் புதியது. எண்ணத்திலும், வாழ்விலும் மனிதன் தன்னை மேலோனாகப் புதுப்பிக்கக்கடமைப் பட்டிருக்கிறான்;

-ஸ்ரீமத்சுவாமி சித்பவானந்தர்-

## கிருஷ்ண ஜெயந்தி

(ஈச்சமோட்டை)

வியாபாரிமூலை ஸ்ரீ பத்திரகாளி சமேத வீரபத்திரர் ஆலயம், வல்வெட்டித்துறை ஸ்ரீ வாலாம்பிகாதேவி சமேத ஸ்ரீ வைத்தீஸ்வரர் ஆலயம் ஆகிய ஆலயங்களில் நேற்று முன்தினம் கிருஷ்ணஜெயந்தி உற்சவம் சிறப்பாக நடைபெற்றது;

[செ - 59

# இலங்கைக்கு ஆயுதம் விற்பதில்லை உலகநாடுகள் பல கூட்டாக முடிவு

## வை. கோபாலசாமி தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை அரசுக்கு இனிமேல் ஆயுதங்கள் மற்றும் போர்த்தளபாடங்களை விற்பதில்லையென உலகநாடுகள் முடிவு செய்துள்ளதாக ம.தி.மு.க.பொது செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் நடைபெற்ற ஊடகவியலாளர்களுக்கான மகாநாடு ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்; கடந்த இருபது ஆண்டுகாலமாக இலங்கை அரசின் அடக்குமுறைக்கெதிராக தமிழ்மக்கள் போராடிவருகின்றார்கள் இதனை சர்வதேச சமூகம் நீண்டகாலத்திற்கு பின் இப்போதே உணர்ந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கானசமாதானத்தீர்வு காணுவதை விடுத்து இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இராணுவரீதியில்தான் தீர்வைக் காணமுயல்கின்றார்.

எனவே இலங்கை ஜனாதிபதி இவ்விடயத்தில் நேர்மையாக செயற்படவில்லை என்பதையே இந்நடவடிக்கை காட்டுசிறது.

ஈழத்தமிழர்களின் சுதந்திரபோராட்டத்தை நசுக்குவதற்காக யுத்தத்தை மேற்கொள்ளும் இலங்கைஅரசுக்கு இனிமேல் ஆயுதங்களை விற்கப்போவதில்லையென 'பல உலகநாடுகள் உறுதியளித்துள்ளதெனவும் கூடுதலாக இலங்கைக்கு ஆயுதங்களை வழங்கிய ரஷ்யாகூட தமிழர்களின் நிலையைஉணர்ந்து ஆயுதங்களை இலங்கைக்கு விற்பனைசெய்வதில்லை என முடிவு செய்துள்ளதெனவும் கோபாலசாமி மேலும் தெரிவித்துள்ளார், (இ-4)

## சடலமாக மீட்பு

[வவுனியா]

மட்டக்களப்புகட்டாக்காலி பகுதியில் மாடுமேய்க்க சென்ற பொழுது காணாமல் போன இளைஞர் ஒருவர் சூட்டுகாயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

கடந்த புதன்கிழமை மாடு மேய்க்க சென்ற கோணலிங்கம் அருட்செல்வம்[வயது 18] என்ற இளைஞரே சடலமாக மீட்கப்பட்ட வராவர். [ந-4]

## சிகிச்சைக்குச் சென்ற சிறுவனின் தங்கச் சங்கிலி அபேஸ்

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனாவைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவதற்காக காத்துநின்ற சிறுவனின் இரண்டு பவுண் தங்கச் சங்கிலி நேற்றைய தினம் களவாடப்பட்டுள்ளது.

அதிக நோயாளர் காணப்படும் நாட்களில் இவ்வாறான சம்பவங்கள் யாழ் போதனா வைத்தியசாலையில் அண்மைக்காலங்களில் அடிக்கடி நிகழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை சிகிச்சையின் பொருட்டோஅல்லது நோயாளர்களைப் பார்வையிடுவதற்காகவோ வைத்தியசாலைக்கு வருவோர் நகைகளை அணிந்துவர வேண்டாம் என வைத்தியசாலை நிர்வாகம் பலதடவைகள் எச்சரித்தும் பொதுமக்கள் இதற்கு செவிசாய்த்து நடக்காமையினாலேயே இவ்வாறான நிகழ்வுகள் இடம்பெற்று வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-10)

## கட்டடத் திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்க கிளையின் புதிய கட்டடத் திறப்பு விழா இன்று காலை 11.30 மணியளவில் அ.பெயஸ்ரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ் மாநகர ஆணையாளர் இ.இராமலிங்கம் ஏற்றிவைப்பார் புதிய கட்டத்தை நல்லூர் பிரதேச சபைத் தலைவர் சூமணிபல்லராஜன் திறந்து வைக்க பெயர்ப் பலகையை யாழ் மாநகரசபை உறுப்பினர் த.சுபத்திரன் திரை நீக்கம் செய்வார்.

வாழ்த்துரையை யாழ் மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தெய்வேந்திரனும் சிறப்புரையை மாநகர சபை உறுப்பினர் மங்களநேசனும் நிகழ்த்துவர்

(ந-4)

### சங்கர் சிகிச்சை

அவரை மருத்துவமனையில் தங்கி நின்று சிகிச்சை பெறுமாறு சட்டவைத்திய அதிகாரி பணித்தார்.

ஆனால் வைத்தியசாலையில் அவருக்குப் பாதுகாப்பு வழங்க முடியாதென பொலிசார் மறுத்துள்ளனர். இவ்விடயம் குறித்து நீதிச்சேவைகள் அமைச்சிடம் முறைப்பாடு செய்யவுள்ளதாக யாழ் நீதிவான் தெரிவித்துள்ளார். (இ-05-10)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

**பல்கலைக்கழக அனுமதி 2001 - 2002**

**கற்கைநெறி- கலை- விசேட அனுமதி**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2001-2002 கல்வியாண்டுக்கு விசேட அனுமதியின் உயர்தரப்பரீட்சையில், கீழ்க்குறிப்பிட்ட பாடங்களில் சித்தி பெற்ற மாணவர்களுள், தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களின் இன்னுமொரு பெயர்ப்பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பப்பட்டு, கலைப்பீடாதிபதி அலுவலக விளம்பரப்பலகையில் இடப்பட்டுள்ளது.

அனுமதி பெற்ற மாணவர்கள் தங்கள் பதிவுகளை 2001-09-21ம் திகதிக்கு முன் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

| | | மாணவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1) | மெய்யியல் | - 25 |
| 2) | வரலாறு/தொல்லியல் | - 21 |
| 3) | கிறிஸ்தவநாகரீகம் | - 20 |
| 4) | மொழியியல்/இந்துநாகரீகம் | - 124 |
| 5) | மனைப்பொருளியல் | - 06 |
| 6) | ஆங்கிலம் | - 01 |
| 7) | புவியியல் | - 11 |
| 8) | சமஸ்கிருதம் | - 03 |
| 9) | நாடகமும் அரங்கியலும் | - 27 |

கலை கற்கைநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட புதிய மாணவர்களுக்கான வரவேற்பும், வழிகாட்டல் நிகழ்வும் 2001-09-14ம் திகதி நடைபெறவுள்ளதால் அனுமதி கிடைத்த சகல மாணவர்களையும் இந்நிகழ்வில் பங்குகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பதிவாளர்
2001-09-10 (கி/2479)


# சௌக்கிய சேவையாளர் நாளை வேலைநிறுத்தம்

(கொழும்பு)

வடக்குக்கிழக்கு உட்பட நாடெங்கும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் கடமை ஆற்றும் 80ஆயிரம் சௌக்கிய சேவை ஊழியர்கள் நாளை புதன்கிழமை ஒருநாள் அடையாள வேலைநிறுத்த மொன்றை மேற்கொள்ள வுள்ளனர் என ஸ்ரீலங்கா மக்கள்குடியரசு சௌக்கிய சேவை சங்கத்தின் தலைவர் டபிள்யு விமலரட்ணா அறிவித்துள்ளார்.

சௌக்கிய சேவைசங்கஊழியர்களின் அடிப்படைச்சம்பளம் 8500ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும்:

அச்சம்பள அதிகரிப்பு வழங்கப்படும்வரை 3ஆயிரம்ரூபா இடைக்கால அலவன்ஸ் வழங்குதல்.

சீருடைத்துணி கொள்வனவு சப்பாத்துக் கொள்வனவு செய்யவும், வருடம் 6ஆயிரம்ரூபா முற்பணம் வழங்குதல்.

பதவி உயர்வுக்கான பயிற்சியை உடன் ஆரம்பித்தல் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தே இந்தஅடையாள வேலைநிறுத்தம் மேற்கொள்ளப்படவிருப்பதாக சங்கத்தலைவர் தெரி தெரிவித்துள்ளா. (ம)

### கட்டடம் கட்ட

படைத்தரப்பினருக்கு அறிவிக்கப் பட்டுள்ளது.

தற்போது அதிவாரம் வெட்டப்பட்ட இடத்துக்கு பின்புறமாக 512 வது படையணி தலைமை அலுவலகம் அமைந்திருப்பதும் 1996ம் ஆண்டில் இப்பகுதியில் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தமையும்.

மேற்படி மண்டையோடுகள் மனித எலும்புகள்காணப்பட்ட பகுதியாழ் படையினரின் பயன்பாட்டில் இருந்து மிக அண்மையிலேயே யாழ் போதனா வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இங்குகுறிப்பிடத்தக்கது

யாழ் குடாநாட்டில்காணாமல் போனோரின் எண்ணிக்கை அதிகரித்து வரும் இந்நிலையில், செம்மணிப் புதைகுழி, யாழ் துரையப்பா ஸ்ரேடிய புதைகுழிகளை அடுத்து யாழ் போதனா வைத்தியசாலையிலும் மற்றொரு மனிதப் புதைகுழி இருக்கலாமென சந்தேகம் எழுந்துள்ளது. (வ-உ- 10)

## இன்று பயணம்

அகிலஇலங்கை ரீதியில் நடைபெறும் தமிழ்த்தினப் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக முதற்கட்டமாக யாழ் மாவட்டத்தில் இருந்து 9 மாணவர்கள் இன்று கொழும்புபயணமாகின்றனர்

இவர்களுடன் மூன்று ஆசிரியர்களும் மூன்று பெற்றோரும் செல்கின்றனர்: மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பயணச்செலவைஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பொறுப்பேற்றுள்ளார். பயண ஒழுங்குகளை வடமாகாண அதிபர் சங்கதலைவர் க.இராசதுரை மேற்கொண்டுள்ளார்

### சந்நிதியில்

மதிக்கப்பட்டவர் நேற்றுஉயிரிழந்துள்ளார்

புலோலி மேற்கு தம்பசிட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் விஜயபாலன் [வயது30] என்பவரே உயிரிழந்தவராவர்

எரிகாயங்களுடன் மந்திகை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர்மேலதிக சிகிச்சைக்காகயாழ்போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சைபயனளிக்காத நிலையில் உயிரிழந்துள்ளார். (இ-52)

### அமைச்சர்...

அமைச்சர்களானபேராசிரியர் ஜீ.எல் பீரிஸ்,.எஸ்.பி. திசாநாயக்காஜெராஜ்பெர்னாண்டோ புள்ளே ஆகியோருக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படவிருப்பதாகவும் அமைச்சர் அலவிமௌலானா, அமைச்சர் பௌஸி ஆகிய இருவரில் ஒருவருக்கு அமைச்சர் பதவி வழங்கப்படலாம் என்றும் ஜனாதிபதி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறு இருக்க அமைச்சரவைக் குறைப்பினால் அரசில் இருந்து சுமார் 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தாவலாம் என்ற சந்தேகம் ஜனாதிபதிக்குத் தற்போது எழுந்துள்ளதாகவும் தெரியவருகிறது. (வ)

### இந்திய மீனவர்

டிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் பிரஸ்தாப மீனவர்களின் வள்ளங்களும் எடுத்துச் செல்ல ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை பிரஸ்தாப மீனவர் ஒருவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட தங்கச் சங்கிலி ஒன்றும் உரியவரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


நன்றிகள் பல கூறுகின்றோம்

யாழ்ப்பாணத்தின் உதை பந்தாட்டத்துறை அபிவிருத்திக்காக தம்மாலான உதவிகளைப் புரிந்து வருகின்ற;

மாண்புமிகு அமைச்சர்

**K. N. டக்ளஸ் தேவானந்தா**

அவர்களுக்கு எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்வு கொள்கின்றோம்.

- யாழ் உதைபந்தாட்ட லீக்

(3335)





நவநாகரிக தங்க நகைகளுக்கு

**நிருத்திகா ஜுவலர்ஸ்**

177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P 021 - 2694

(கி 2367)


இப் பத்திரிகை "வலம்புரி" அன் கோ ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளார்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001-ம் ஆண்டு சப்ரெம்பர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.